# அன்புக்கயிறு

## நாடகம்

கதை வசனம்

நாக சண்முகம்

பழநியப்பன் - தெய்வானை

மண விழா நினைவு வெளியீடு

31—10—54

முதற்பதிப்பு-அக்டோபர் 54

உரிமை ஆசிரியர்க்கே

அச்சிட்டோர்:

கலைமகள்-காரைக்குடி

# முன்னுரை

அத்தைமகள், வீட்டில் வளர்கிருள். அம்மான் மகன் கடல் கடந்து சென்று பொருளீட்டித் தாயகம் திரும்புகிருன். அவர்கள் ஓருயிரும் ஈருடலுமாகிவிடுகின்றனர். தாய் தந்தையர் விருப்பமும் அதுவே. திருமணம் செய்துகொள்வதென்ற முடிவும் ஏற்பட்டுவிடுகிறது. காதலன் போர்க் களத்திற்குச் சென்று அங்கும் வாகைமாலை சூடிவருகிருன். அதற்கிடையே காதலிக்கு அளவுகடந்த செல்வம் கிடைக்கிறது. அவள் மனம் மாறுகிறது. பெருஞ் செல்வன் ஒருவனையே மணக்க விரும்புகிருள். இந்த மாற்றத்தால் இருவரும் தனித்தனியே வாழ்கின்றனர். துன்பங்களை அனுபவிக்கின்றனர். "குறள்" வழங்கும் அறிவுரை அவர்களுக்கு எட்டுகிறது. அவர்கள் அறிவு தெளிவடைகிறது. எதிர்பாராத விதமாக இருவரும் சந்திக்கின்றனர். பிரிந்தவர் கூடிஞல் பேசவும் வேண்டுமோ ? தாலிக் கயிறு ........ இல்லை, இல்லை அன்புக் கயிறு கட்டப்படுகிறது.

இந் நிகழ்ச்சிகளை நாடகமாக அமைக்கிருர் ஆசிரியர் அவரது கற்பனை வளத்தால். காதலரின் உள்ளத் துடிப்பும் சமூகத்தில் மலிந்துள்ள சில மரபுகளும் நன்ருகப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

"பொருள் தேடும்வணிகருக்குப்போர்க் களத்திலும் வேலை உண்டு" என்று ஆடவருக்கும், "வாழ்வுக்குப் பொன்னும் பொருளும் போதா ; இன்பத்திலும் துன்பத்திலும் அன்பு செலுத்தும் அருமைக் கணவனும் வேண்டும்" என்று பெண்டிருக்கும் அறிவுரை நல்குகிறது "அன்புக் கயிறு"

அமைப்பு முறையைக் காண்போம். காட்சி கடல் கடந்த நாடுகளில் தொடங்கி, கடற்கரைக்குச் சென்று, ஓடத்தில் உலவி, மாட மாளிகைகளில் தங்கி, அரண்மனைக்குள் புகுந்து, மைதானத்திற்கு வந்து, குடிசைக்கும் குடிசைக்கு அருகேயுள்ள ஆல மரத்துக் கல் மேடைக்கும் நம்மை அழைத்துச் செல்கிறது.

நூலின் தூய தமிழ் நடை படிப்பவர் உள்ளத்தை ஈர்க்கிறது. கையாளப்படும் சொற்கள் ஓசை இனிமை உடையன. சொல்லோட்டம் கருத்தோட்டத்தைத் தடை செய்யவில்லை.

திருமண நினைவாகத் தமிழ் நூல்களை வெளியிடும் சிறந்த வழக்கம் செட்டிநாட்டில் பல ஆண்டுகளாக நிலவி வருகிறது. அம்முறையை யொட்டி வெளியிடப்படும் இந்நூலுக்கு "அன்புக் கயிறு" என்ற தலைப்பு மிகப் பொருத்தமானதே. தாலிக் கயிறு ஓர் அன்புக் கயிறு என்ற உண்மையை இது மணமக்களுக்கு நினைவூட்டும்.

மொழியார்வம் உடையவர்க்கு இக்காலத்தில் பஞ்சமில்லை. ஆயினும் ஆர்வத்திற்கேற்ற அறிவைக் காணுதல் அருமையாகவே உளது. தமிழார்வத்தோடு தமிழறிவும் நிரம்பியவர் இந்நூலாசிரியர் நாக சண்முகம். இவர் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வருபவர். இவருடைய இலக்கிய முயற்சிகள் சிறந்து விளங்க வேண்டுமென்பது என் பேரவா. தமிழில் நாடக நூல்கள் போதிய அளவு இல்லாத குறையை நிறையாக்கக்கூடிய இளைஞருள் இவரும் ஒருவர் என்பது என் நம்பிக்கை. ஒல்லும் வகையாலெல்லாம் இவரை ஊக்குவிக்க வேண்டுமென்பது தமிழ் அன்பர்களுக்கு வேண்டுகோள்.

நெற்குப்பை
24-10-54

**"சோமலெ"**

# சில சொற்கள்

நாடகத்துறை மூலம் நாட்டைத் திருத்த முடியும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் வலிவு பெற்றுவருகின்றது. எனவே நாடகங்கள் பல, நாட்டிற்குத் தேவை யென்பதும் அவை நல்லாரால் ஆக்கப்பட வேண்டுமென்பதும் பெறப் படுகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளாக நான் சில நாடகங்களை எழுதியும் நடித்தும் இருக்கிறேன். என்றாலும் முதன் முதலில் என் சிறிய நாடகம் ஒன்றை மண நினைவாக வெளியிட முன்வந்த நண்பர் திரு. பழநியப்பன் அவர் களுக்கு என் மனமுவந்த வணக்கம் உரியது.

என்னை நாடகம் எழுதத் தூண்டிய நண்பர்களுக்கும் நாடகங்களைக் கலைக் கழகத்தின் மூலம் நடத்தி வெற்றி கண்ட அன்பர்களுக்கும் நான் இன்றுமட்டுமல்ல என்றுமே கடமைப்பட்டவன்.

"அன்புக்கயிறு" காதற் சுவை நிறைந்ததோர் நாடகம். செந்தமிழ்க் கவிஞர் சுந்தரம் பிள்ளையின் சிவகாமி சரித்திரத்தை அடித்தளமாகக் கொண்டு உரு வாக்கப்பட்டது.

உலகம் சுற்றிய தமிழரும் உயர்ந்த உள்ளம் படைத்த வரும் சிறந்த எழுத்தாளருமான உயர்திரு "சோமலெ" அவர்கள் இந்நூலுக்குச் சிறந்தமுறையிலே உயர்ந்த வகை யிலே முன்னுரை தந்துள்ளார்கள். அவர்களுக்கு என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கருத்துரை தந்துதவிய நண்பர்களுக்கும் விரைவாக வும் அழகாகவும் அச்சிட்டுத் தந்த காரைக்குடி - கலைமகள் அச்சகத்தாருக்கும் என் வணக்கம் உரியது.

நாக சண்முகம்

4-AUG 1956



## நன்றி

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் குறிப்பிடத்தக்க நாள் அவர்களுடைய திருமண நன்னாளாகும். என் வாழ்க்கையிலே அப்பொன்னாளே இந்நாள். அந் நினைவாகவே இந் நூல் வெளிவருகிறது. நாடகத் துறையில் பேரார்வமுடைய நண்பர் திரு. நாகசண்முகம் அவர்கள் **அன்புக்கயிறு** என்ற நாடக நூலை ஆக்கித் தந்தார்கள். அவர்கட்கும் முன்னுரை வழங்கிய அறிஞர் திரு. "சோம. லெ." அவர்கட்கும் என் நன்றி.

அன்பே உருவான என் அன்னையார் அவர்கட்கும் உற்றார் உறவினர்கட்கும் என் நன்றி கலந்த வணக்கம்.

என் வாழ்க்கைக்கு வழி வகுத்துத்தந்த மேலைச்சிவபுரி திரு. அ. சொ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கட்கும் பல்லாற்றானும் உதவி பல புரிந்த நெற்குப்பை திரு. ராம. கா. காசிச்செட்டியார் அவர்கட்கும் என் நன்றி.

இத் திருநாளில் கலந்துகொண்டு வாழ்த்திச் சிறப்பித்த அனைவருக்கும் என் மனமுவந்த நன்றி.

வணக்கம்.

31-10-54
மேலைச்சிவபுரி

**முரு. பழ. பழநியப்பன்**
**(முருகுமணி)**

## காட்சி 1.

(பொன்னும் மணியும் மின்னும் பிற பொருள்களும் மலைகளெனக் குவிந்து கிடக்கும் மாநகர். செம்மல் இளங்கோ வடிகளின் செந்தமிழ்க் காவியமாம் சிலப்பதிகாரம் தோன்று தற்குக் காரணமான தொல் நகர். அந்நகர்தான் கற்பனைகள் மிகுந்த கலையழகு சிறந்த புகார் நகரம். அங்குதான் நம் கதை துவங்குகின்றது.

திரைகடல் தாண்டித் திரவியம் தேடிவந்த வைர வணிகர் மகன் தமிழரசனும், முத்து வணிகர் மகன் எழிலரச னும் இயற்கை இன்பங்களைக் காணக் கடற்கரையை அடைகிறார்கள்.)

**தமிழரசன் :-** *நண்பா! வானத்தில் அழகு பொழியும் நிலவு, வையத்தில் அலைபாயும் கடல், காவிரி, கடலோடு கலக்கும் கவின் பெரு காட்சி, காவிரியின் இரு மருங்கும் கண்ணைக் கவரும் பசுஞ் சோலைகள், இந்த எழில் மிக்க காட்சிகளைக் கண்டு எத்தனை ஆண்டுகளாகிவிட்டன.*

**எழிலன் :-** *ஆம் தமிழரசா! சிறுவர்களும், சிறுமிகளுமாக அந்த நாளில், எத்தனைமுறை இந்த மணல் வெளியில் ஆடியும் பாடியும் அக மகிழ்ந்திருப்போம். அந்த இன்பம் செறிந்த நாட்களை எப்படி மறக்கமுடியும். ஆனல்.............*

**தமிழ :** *என்ன நண்பா!*

**எழில் :** இந்த இளமைக் காலத்தில் எழில்சேரும் காட்சிகளைக் காண உன் பக்கததிலே நான் இருக்கக் கூடாது.

**தமிழ :** இந்த இனிமையான காட்சிகளைத் தனிமையில் இருந்து காணவேண்டு மென்கிருயா?

**எழில் :** தனிமை! (கேலிப் புன்னகை) உனக்கா? இந்த வயதிலா? வேடிக்கை. பந்த பாசங்களைத் துறந்து அந்தமில் இன்பத்தை அடைய விரும்புகிருர்களே அவர்களுக்கு வேண்டுமப்பா தனிமை. இந்த இனிமையான காட்சிகளைக் காண, கனிவோடு பேசும் கட்டழகி ஒருத்தி உன் பக்கத்திலே இருக்கவேண்டு மென்கிறேன்.

**தமிழ :** ஐயையோ! அந்த வம்பே வேண்டாமப்பா, வேண்டாம். உள்ளம் அறிந்து பழகும் உயர்ந்த நண்பன் நீ பக்கத்திலே இருக்கும்போது எழில் மிக்க இயற்கைக் காட்சிகளை ஏன் கண்டு களிக்க முடியாது?

**எழில் :** காவி உடைதரித்துக் கையிலே கமண்டலம் தாங்கிப் பாவிகளுக்கும் பக்தர்களுக்கும் பரமனை அடைய வழிகாட்டும் யோகியைப்போல் பேசுகிருயே! எத்தனை நாட்களுக்கப்பா இந்தப் பேச்சு நிலைக்கப் போகிறது. அத்தை மகள் சிவகாமி மெத்த ஆசையோடு உனக்காக வளர்ந்து வருகிருள். "கட்டடா தாலியை" என்று உன் தந்தை சீக்கிரமே ஆணையிடப்போகிருர். வாய் திறவாது அந்த வனிதையின் கழுத்திலே மஞ்சள் கயிற்ருல் மறவாமல் மூன்று முடிப்புகளை எண்ணிப் போடப்போகிருய். வேண்டாமப்பா அந்த வம்பெல்லாம் என்ருல் யார் உன்னை விடப்போகிருர்கள்?

**தமிழ :** நண்பா! இருமனம் ஒன்றுபட்டதல்லவா திருமணம். நாம் சிறுவர்களாக இருக்கும்போதே திரைகடல் தாண்டித் திரவியம் தேடச்சென்ற தந்தையரோடு சென்றுவிட்டோம். இன்று சிவகாமி எப்படி இருக்கிருளோ? யார் கண்டார்கள்?

**எழில் :** இப்பொழுதும் பெண்ணாகத்தான் இருப்பாள்.

**தமிழ :** அதைச் சொல்லவில்லை அப்பா! எண்ணம் எப்படி இருக்குமோ. யார் கண்டார்கள். அவள் என்னை விரும்பவேண்டும். அதோடு அவளை நானும் விரும்ப வேண்டுமல்லவா?

**எழில் :** அடேடே! வாயை மூடப்பா! நீ இருக்கும் அழகிற்கு வேறு யார் பெண் தரப்போகிறார்கள்? சிவகாமியே இந்த மட்டமான ஆளை நான் கட்டிக்கொள்ள மாட்டேன் என்று சொன்னாலும் சொல்லி விடுவாள்.

**தமிழ :** போகட்டுமே நான் திருமணம் செய்துகொள்ளாமலே இருந்து விடுகிறேன்.

**எழில் :** ஐயோ! பாவம். பச்சைக் குழந்தைபோல் பேசுகிறாயே. உன்னை இப்பொழுது பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது.

**தமிழ :** முன்பெல்லாம் குவலயமே போற்றும் அழகன் என்று புகழ்வாய். இன்று குரூபி என்று இகழ்கிறாய். நீ என் உற்ற நண்பனல்லவா! அதனால் என்னைப் பற்றி நீ என்ன வேண்டுமானாலும் பேசலாம். போற்றவும் தூற்றவும் உனக்கு உரிமை உண்டு.

**எழில் :** சரி, சரி, வா. தமிழரசா! தடையென்ன. நீ குவலயமே போற்றும் அழகன்தான். சிவகாமி உன்னைக் காணப்போகிறாள். நீ அவளை மணக்கப் போகிறாய். பின் என்ன இருவரும் மனமகிழ்ந்து வாழப் போகிறீர்கள். அப்பொழுது என்னைப் பற்றி நினைப்பாயா? அட தமிழரசா என்று கூவி அழைத்தாலும் ஏன் என்றுதான் கேட்பாயா?

**தமிழ:** எழில்! கன்னித்தமிழ் நாட்டில்பிறப்பவர்களுக்குக் கற்பனையும் கூடவே பிறந்துவிடுகிறது இல்லையா? நல்ல நிலவு! வா சிறிது தூரம் ஓடத்தில் சென்று வருவோம்.

---

## காட்சி 2.

### இடம்: கடற்கரை

[கடற்கரையின் மற்றோர் பகுதியில் சிவகாமியும் அல்லியும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்த வண்ணம் இருக்கின்றனர்.]

**அல்லி:** சிவகாமி! உன் அத்தான் தமிழரசர் வந்து விட்டாராமே. அத்தான் என்றதும் வெட்கத்தைப் பாரேன்; நாளை உன்னைப் பார்ப்பதற்குக் கூட வரப் போகிறாராமே உனக்குத் தெரியாதா?

**சிவ:** தெரியும் அல்லி, உனக்குத் தெரியாத ரகசியம் என்ன இருக்கிறது. மிகச் சிறுவயதிலேயே மாமா அத்தானை அழைத்துச்சென்றுவிட்டார். பட்டுப் பாவாடை கட்டிய சிறுமியாக நானும், பாலகனாக அவரும் இருந்து விளையாடிய அந்தநாள் நினைவுகளைத் தவிர அவரைப்பற்றி வேறு என்னடி எனக்குத் தெரியும்?

**அல்லி:** தெரியாவிட்டால் என்னடி. சொல்கிறேன் கேள். உன் அத்தான் வீரத்திலும் விவேகத்திலும் பாராளும் மன்னர்களைப்போலவே இருப்பாராம். அவர் தமிழ் பேசும் போது அமிழ்தமென இனிக்குமாம். அவர் அழகிலே, அற்புதமான பேச்சிலே, உன் அகத்தைப் பறிகொடுத்துவிடப்போகிறாய்? அப்புறம் என்னை ஏறெடுத்துப் பார்ப்பாயா? ஏன் என்றுதான் கேட்பாயா?

**சிவ:** போடி குறும்புக்காரி நிறுத்தடிஉன் பேச்சை. பால்போல் நிலவு வா சிறிது தூரம் ஓடத்திலே சென்று வருவோம்.

---

## காட்சி 3.

(தமிழரசனும் எழிலனும் ஓடத்திலே செல்கின்றார்கள்)

**எழில்:** தமிழரசா! பொங்கிவரும் அலைகள், பொலிவு தரும் நிலவு, ஆடி அசைந்து செல்லும் அழகிய ஓடம். நீ கலை உள்ளம் படைத்த கவிஞனல்லவா?

**தமி :** நானா !

**எழில் :** ஆம் நீதான்.

**தமி :** புகழ்ச்சி பலமாக இருக்கிறதே எதற்காகவோ சுற்றி வளைத்துப் பேசுகிறாய்.

**எழில் :** வேறொன்றுமில்லை. இந்த இன்பமயமான சூழ்நிலையிலே உன் இனிமையான பாட்டைக் கேட்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

**தமி:** பூ. இதற்குத்தானா? நீ என் உற்ற நண்பன், உயிர் நண்பன், வாழ்விலும் தாழ்விலும் காலை வாரிவிடும் கண்யமான நண்பன் !

**எழில் :** டேய் ! என்ன சொன்னாய் ?

**தமி :** ஓ வாழ்விலும் தாழ்விலும் காப்பாற்றும் கண்ணியமான நண்பன் சரிதானா? ஒரு பாட்டுப் பாடு என்று ஆணையிட்டால் போதுமே, பாடிவிடமாட்டேனா ?

**எழில் :** நல்ல பிள்ளையாகிவிட்டாயே உனக்கும் நல்ல புத்தி வந்துவிட்டது.

**தமி :** வியப்படைகிறாயா உன்னோடு நண்பனாக இருப்பவனுக்கு நல்ல புத்தி வந்துவிட்டதெனறால் வியப்படையாமல் வேறு என்ன செய்ய முடியும் ?

[தமிழரசன் பாடுகிறான். அவனது இனிய கானம் காற்றிலே மிதந்து மற்றோர் பகுதியில் ஓடத்தில் வரும் பெண்கள் காதுகளில் விழுகின்றது.]

**சிவகாமி :** அல்லி !

**அல்லி :** என்ன சிவகாமி !

**சிவ :** எங்கிருந்தோ ஓர் இனிய குரல் கேட்கிறதே யார் பாடுவது ?

**அல்லி :** நானும் உன்னோடுதானே இருக்கிறேன் எனக்கு எப்படியடி தெரியும் ?

**சிவ :** கடற்குமரன் தான் பாடுகிறானோ ?

**அல்லி :** அசடே! கடற்குமரனா? வானத்து நிலவும், வையத்துக்கடலும், வரைப்புடைய பிற பொருள்களும் உனக்கும் எனககும் மட்டுமா சொந்தம்? உலகத்து மக்களுக்கெல்லாம் அவை பொது உடைமைச் சொத்துக்கள அல்லவா? யாரோ ஆண் ஒருவன் பாடுகிருண் அதோ பார். ஓர் ஓடம! இரண்டு பேர்! ஆண்கள் தான்! அதில் ஒருவன் தான் பாடுகிருன்.

**சிவ :** என்ன இனிமை!

**அல்லி :** என்னடி இப்படிச் சொக்கிவிட்டாய். நீ மட்டுமென்ன மட்டமா? நீ பாடு. என்னடி யோசனை...பாடடி என்ருல் பாடு. இல்லை என்ருல் என்ன செய்வேண் தெரியுமா.

**சிவகாமி :** ஏண்டி கூச்சல் போடுகிருய்?
(சிவகாமி பாடுகிருள் அவளுடைய செந்தமிழ்ப் பாடலைத் தமிழரசனும் எழிலனும கேட்கிருர்கள்)

**தமிழ :** எழில்! எங்கிருந்தோ ஓர் இனிமையான இசை வருகிறதே கவனித்தாயா யார் பாடுவது?

**எழில் :** அதோ அங்கே பார்.

**தமிழ :** ஓர் ஓடம் அதைத்தானே சொல்லுகிருய்?

**எழில் :** ஆம் தமிழரசா அதில் ... ...

**தமிழ :** அதில் என்ன?

**எழில் :** இரண்டு பெண்கள் தான் இருக்கிருர்கள்!

**தமிழ :** இருக்கட்டுமே.

**எழில் :** இருக்கட்டுமா? அவர்களில் ஒருத்திதான் பாடுகிருள்.

**தமிழ :** பாடட்டுமே.

**எழில் :** நம் ஓடத்தை அவர்கள் ஓடத்தின் பக்கம் செலுத்தப்போகிறேன்.

**தமிழ :** எதற்காக?

**எழில் :** இதென்னடா கேள்வி? அவர்கள் நம்மைத்தான் தேடி வருகிறார்களோ என்னவோ? பாவம் பெண்கள்! இரவு நேரமல்லவா போய்ப்பார்க்க வேண்டாமா?

**தமிழ :** என்னப்பா! உனக்குக்கூடத் திடீரென இரக்கம் தோன்றி விட்டது?

**எழில் :** எப்படித் தோன்றாமல் இருக்கும்? பெண் என்றால் பேயும் இரங்குமாமே. நான் என்ன பேயைவிட மோசமென்று நினைத்தாய்?

[ எழிலன ஓடத்தை வேகமாகச் செலுத்துகிறான் ஓடங்கள் நெருங்குகின்றன. பால் போல் நிலவு. கேட்கவேண்டுமா? தமிழரசன்-சிவகாமி-,எழிலன் -அல்லி, இந்த இரண்டு ஜோடிகளின் உள்ளங்களும் உறவாடத் தொடங்குகின்றன அவர்கள் கண்களோ காதல்கீதம் பாடுகின்றன. இந்த் நிலையில் எழிலன் தன் உணர்வடைகிறான். தமிரசனின் நிலையைக் கண்டு]

**எழில் :** தமிழரசா! டேய், என்னடா; இப்படிப் பார்க்கிறாய்? தமிழரசா! (அவன் தோளைப் பிடித்துஉலுக்குகிறான்).

**தமிழ :** [ தன் நிலையை அடைந்து ] என்ன எழில்!

**எழில் :** [ கிண்டலாக ] என்ன எழில்?......முத்துவணிகர் மகன் எழில்.

**தமிழ :** எழில்! அந்தப் பெண்ணின் அழகைப் பார்த்தாயா?

**எழில் :** நீயேபாரப்பா.

**தமிழ :** வானத்தில் ஓர் நிலவு. வையத்தில் மற்றோர் நிலவு

**எழில் :** (கிண்டலாக) சரிதான். ஆரம்பமாகி விட்டதா?

**தமிழ :** நீமட்டும் என்னவாம். மற்றொரு பெண் இருக்கிறாளே அவளை நான் அறியாமலே பார்த்துவிட நீமுயற்சி செய்வது எனக்குத் தெரியாமலா இருக்கிறது.

[ சிவகாமியும் அல்லியும் தங்களுக்குள் பேசிக் கொள்ளுகிறார்கள் ].

**அல்லி :** சிவகாமி! என்னடி இப்படிப் பார்க்கிறாய்? அடி சிவகாமி.

**சிவ :** (பெருமூச்சு) அல்லி! அவரைப் பார்த்தாயா? எழில் சேர்ந்த முகம், எடுப்பான தோற்றம், அளவில்லா இன்பம் தரும் அமுத இசை.

**அல்லி :** சரிதான், வந்ததா வினை.

[இந்தக் காதல் ஜோடிகள் இன்பக் களிப்பால் தங்களை மறந்தார்கள். வானத்தே கருமேகங்கள் சூழ்ந்தன. மின்னலும் தோன்றியது. நிலைமை அறிந்த பெண்கள் திடுக்கிட்டார்கள்.]

**அல்லி :** சிவகாமி! மழை வரும்போல் இருக்கிறதே! வானம் இருண்டுவிட்டது, என்ன செய்வது? மழை தூற ஆரம்பித்துவிட்டதே. ..நீண்டதூரம் வந்துவிட்டோம். இனி எப்படியடி திரும்புவது?

**சிவ :** ஆம் அல்லி என்ன செய்வது?
[எழிலனும் தமிழரசனும் பேசிக்கொள்கிறார்கள்,]

**எழில் :** தமிழரசா! பாவம், அந்தப் பெண்கள் பயந்துவிட்டார்கள்.

**தமிழ :** பெண்கள் தானே!

**எழில் :** நம் படகிலேயே அவர்களையும் அழைத்துச் சென்று விட்டால் என்ன?

**தமிழ :** நல்ல யோசனை நண்பா!

**எழில் :** (கிண்டலாக) அட, அன்பா! இப்பொழுது வேறு எப்படியடா சொல்வாய்?

**தமிழ :** (சற்றுப் பலமாக) பெண்களே! மழை பலமாக வரும்போலிருக்கிறது. எனவே நீங்கள் வர விரும்பினால், தவறாகக் கருதாவிட்டால் எங்கள் ஓடத்திலேயே வரலாம். பாதுகாப்போடு கரையில் சேர்த்து விடுவோம்.

**அல்லி :** (யோசித்து) சிவகாமி! அதுதான் நல்லது வா போய்விடுவோம்.

**சிவ :** போடி. ஆண்களோடா போவது?

**அல்லி :** (மெதுவாகவும், கடுமையாகவும்) ஏண்டி ஆண்களைப் பார்க்கலாம், பரவசமடையலாம் பக்கத்தில் மட்டும் போகக்கூடாதோ? கள்ளி! ஆபத்தான சமயமடி இது. போனுல் அவர்கள் நம்மைக் கடித்தா தின்றுவிடுவார்கள்?

[பெண்கள் இருவரும் ஆண்களின் ஓடத்தில் ஏற்க்கொள்கின்றனர்கள். ஓடம் கரையை அடைகின்றது. மழையும் நிற்கின்றது. மேகங்கள் கலேகின்றன. நிலவு மீண்டும் தோன்றுகின்றது.]

**சிவ :** ஐயா! தாங்கள் செய்த உதவிக்கு மனமார்ந்த நன்றி. அதோ காணப்படுகிறதே அந்த உயர்ந்த ஒளி மாடம் என் பெரியம்மாவுடையதுதான். நீங்கள் இங்கேயே தங்கிக் காலேயிலே பட்டினம் செல்லலாம்.

**தமிழ :** பெண்கள் தனியாக இருக்கும் இடத்தில் தங்கும் பழக்கம் எங்களுக்கு இல்லே. வணக்கம்!

[தமிழரசனும் எழிலனும் பட்டினம் நோக்கிச் செல்லுகின்றனர்கள். அவர்கள் சிறிது தூரம் சென்றபின்]

**சிவ :** என்ன துடுக்கான பேச்சு?

**அல்லி :** பேசாமல் என்னடி செய்வார்? எங்களிடம் என்றல் பேச்சுக்குப் பேச்சு எதிர்ப் பேசுப் பேசுவாய். இப்பொழுது வாயை மூடிக்கொண்டுதானே இருந்தாய். நீதான் அந்த அரும்பு மீசை அழகனிடம் உன் அகத்தைப் பறிகொடுத்துவிட்டாயே.

**சிவ :** பைத்தியமே, உளருதே.

**அல்லி :** அடியம்மா! அதற்குள் என் பேச்செல்லாம் உளறல் ஆகிவிட்டதா? அவர் மயக்கமடி உன்னே இப்படிப் பேசச் சொல்லுகிறது.

**சிவ :** என்னருமைத் தோழியே! அவர் பாடலிலே தென்றலும் புயலும் ஒன்ருய் உலவக் கண்டேன். தேன் பாயக் கண்டேன். மயில் ஆடக் கண்டேன். மங்கையர் துள்ளியோடக் கண்டேன. மறத் தமிழர் பண்பு கண்டேன். அறத்தின் உண்மை கண்டேன. அளவில்லா இன்பம் கொண்டேன். அல்லி! என்ன இனிமை? உண்மைதான் தோழி. அவரைப் பார்த் ததுமே என் உள்ளம என்வசமில்லே.

---

## காட்சி 4.

**எழில்:** என்ன திரும்பித் திரும்பிப் பார்க்கிருய்? போதுமப்பா நட, போகலாம்.

**தமிழ:** (நின்றவாறே) அபூர்வமான அழகி!

**எழில்:** என்னப்பா இப்படி ஆகிவிட்டாய்? சற்றுமுன் தானே "திருமணமா? அதை என் காதில் போடாதே, அந்தவம்பு எதற்கு" என்று துறவிபோல் பேசினுய்.

**தமிழ:** பேசினேன் நண்பனே பேரின்பம் எது என்று அறியாது பேசினேன். அவள் கடைந்தெடுத்த சிற்பம். காணும் கண்களைக் கவருகின்ற காந்தம். பேசும் பொற்சிலே. பெட்புடைய ஓவியம். இப்படிப் பட்ட எழில் மங்கையொருத்தி இருக்கிருள் எனத் தெரியாமல் பேசினேன். (பெருமூச்சு) பசியில்லாத நேரம் பாலின் சுவை தெரியாதவன் பாலேப் பழிப் பதில்லேயா? அதுபோல.

**எழில்:** அழகாக இருக்கிறது நீ பேசுவது நாடக வசனம் போல. ஆனுல் அறிவிற்குப் பொருத்தமாக இல்லேயே.

**தமிழ:** ஏன் எழில்?

**எழில்:** விடிந்ததும் மாமன் மகள் சிவகாமியைப் பார்க்கப் போகிருய். எதற்காகத் தெரியுமா? மணம் செய்து கொள்வதற்காக. அதை மறந்துவிட்டாயா? அதற்குள் மற்ெருரு வனிதையைப்பற்றி வருணிக்கத் தொடங்கி விட்டாயே. போதுமப்பா காதல் நாடகம். நட.

**தமிழ்:** இரு மனம் ஒன்றுபட்டதல்லவா திருமணம். சிவகாமிக்காக என் சிந்தை கவர்ந்தவளை மறந்துவிட முடியுமா?

**எழில்:** (கிண்டலாக) முடியுமா? ஏன் முடியாது? மறந்து தானே ஆகவேண்டும். சிவகாமி உனக்காகவே வளர்ந்து வருகிறுளாம், உன் தந்தையே கூறினர். அவர் மனம் நொந்து உன்னைப்பற்றி நிந்தை மொழி பேசும் படியாகவா நடந்துகொள்ளப் போகிறுய்?

**தமிழ்:** என்ன செய்வேன் நண்பா? கவின் பெரு காட்சிகளைக்காண ஏன் கடற்கரைக்கு வந்தோம், கலக்கத்தோடு திரும்பிச் செல்லவா? என் இதயத்தைக் கவர்ந்தவளை எழில் உருவத்தை எப்படிநான் மறப்பேன்?

**எழில்:** உன் இதயத்தை அவள் கவர்ந்தது சரிதானப்பா. அவள் இதயத்தை நீ கவர்ந்தாயா? அதுவல்லவா முக்கியம்.

**தமிழ்:** கருணை பொழியும் அவள் கருவிழிகள் காதல் கீதம் பாடியதை நீயும்தானே கண்டாய்.

**எழில்:** கண்டேனப்பா கண்டேன். கடற்கரையில் நீ கொண்ட காதலால் என்னென்ன விபரீதங்கள் நிகழப் போகிறதோ யார் கண்டார்கள்?

**தமிழ்:** எதுநேரினும் நேரட்டும். என்மனத்தைக் கவர்ந்த மங்கையை மறக்கமாட்டேன். மற்ெருரு பெண்ணை மணக்கமாட்டேன்.

**எழில்:** ஏன் தமிழரசா. அவர்கள் யாரென்று தெரிந்து கொள்ளவில்லையே.

**தமிழ்:** இந்த அக்கரை அவர்களுக்கும் இருக்குமல்லவா? அதனுல் சீக்கிரமே தெரிந்துவிடும்.

---

# காட்சி 5.

## வைரவணிகர் இல்லம்

**வைர :** தமிழரசா

**தமி :** ஏனப்பா

**வைர :** பெரிய அத்தை மாளிகைக்குப் போய்வரவேண்டும்

**தமி :** யாரப்பா?

**வைர :** நீதான்

**தமி :** நானு நான் எதற்காக அப்பா அங்கு போக வேண்டும்?

**வைர :** என்ன தம்பி இப்படிக் கேட்கிறாய். பல ஆண்டுகளுக்குப்பிறகு தாயகம் திரும்பியிருக்கிறோம். சிறுவனாக அழைத்துச் சென்ற உன்னை வாலிபனாக அழைத்து வந்திருக்கிறேன். அவர்களெல்லாம் உன்னைப் பார்க்க ஆவலாக இருப்பார்களல்லவா? நான் நேற்று அங்கு போயிருந்தேன். அத்தைக்கு உன்னைப் பார்க்க ஆவல் மிகுதி. மேலும் சிவகாமியும் அங்குதான் இருக்கிறாள். என்னாலேயே நம்பமுடியவில்லை, சிவகாமி அப்படி வளர்ந்திருக்கிறாள்.

**தமிழ :** சிவகாமியா? எனக்கு இப்போது திருமணமே வேண்டாமப்பா.

**வைர :** சரிதான். எப்பொழுதும் சிவகாமி நினைவாகவே இருக்கிறாய்போலிருக்கிறது. சிவகாமி அங்கிருக்கிறாள் என்றதுமே திருமணம் வேண்டாமென்கிறாயே ஏன்? அவள்மேல் உனக்கு உள்ள ஆசை எனக்குத் தெரியக்கூடாது என்றுதானே?

**தமிழ :** அதெல்லாம் இல்லையப்பா உண்மையாகவே.....

**வைர :** உண்மையோ பொய்யோ சிவகாமியை உனக்குத் திருமணம் செய்து வைப்பதென்று நானே தீர்மானித்துவிட்டேன். சிவகாமியை எப்படிப் பார்ப்பது என்று வெட்கப்படுகிறாயா? வெட்கப்பட வேண்

டியவள், சிவகாமியல்லவா? வெட்கம் பெண்களுக்குத் தான் அணிகலன். வீரம்தான் ஆண்களுக்கு அணிகலன். சரி வண்டிவந்துவிட்டது போய்வா. ஏன் இப்படித் தயங்குகிருய்? போய்வா போ.

## காட்சி 6.

### முத்தம்மையாரின் மாளிகை

**முத்த:** சிவகாமி!

**சிவ:** ஏன் பெரியம்மா

**முத்த:** இன்று உன் அத்தான் இங்கே வரப்போகிருன்.

**சிவ:** வரட்டுமே அதுக்கென்ன அம்மா?

**முத்த:** அடி பொடிப் பெண்ணே அத்தான் மேல் ஆசையில்லாதது மாதிரி என்னிடமா நடிக்கிருய். போ கண்ணு இன்று உன் அத்தானுக்கு நீதான் உணவு படைக்கவேண்டும். தெரிந்ததா? அவனுக்குத் தானே உன்னை மணம்முடித்துவைக்கப்போகிறேன்.

**சிவ:** அது எப்படியம்மா முடியும்? நான் அவரைப் பார்க்கவேண்டாமா?

**முத்த:** பாரு கண்ணே. நன்ருகப் பாரு. உன் விருப்பத்திற்கு மாருக எதையும் செய்யமாட்டேன். தமிழரசனைப் பார்த்தால் நீ இப்படிப் பேசமாட்டாய். அவ்வளவு அழகாய் இருக்கிருனம்.

**சிவ:** (தனக்குள்) பெரிய சோதனையாக இருக்கிறதே. நேற்று இரவு நான் கடற்கரைக்குச் செல்லாமல் இருந்திருக்கக்கூடாதா.

(பணியாள் ஒருவன் வந்து)

**பணி:** அம்மா

**முத்த:** ஏனப்பா

**பணி:** வைரவணிகர் மகன் தமிழரசன் வருகிருர்.

முத்த : அப்படியா. வரட்டும். (தமிழரசன் வருகிருன்) தமிழரசா வாப்பா வா.

தமிழ : வணக்கம் மாமி.

முத்த : எப்பொழுது வந்தாய்?

தமிழ : இரண்டு நாட்களாகின்றன.

முத்த : ஆளையே தெரியவில்லையே! ஐந்து வயதுச் சிறு வனயிருக்கும்பொழுது பார்த்தது.

தமிழ : காலத்தின் வளர்ச்சி மாமி.

முத்த : நல்ல அழகனுய் இருக்கிருய்.

தமிழ : இயற்கை தந்த செல்வம் மாமி.

முத்த : தமிழரசா மேன்மாடத்துக்குப் போ. உணவு தயா ராகிவிட்டதா என்று பார்த்து வருகிறேன். சிவகாமி கூட அங்குதான் இருக்கிருள்.

தமிழ : சிவகாமியா?

முத்த : ஆம். சிவகாமிதான் உனக்குத் தெரியாதா? அவளை மறந்துவிட்டாயா? உன்னைப் போலவே அவளும் வளர்ந்து விட்டாள்.

தமிழ : நான் இங்கேயே இருக்கிறேன் மாமி.

முத்த : ஏன் வெட்கமா ? யாரங்கே.

(பணியாள் வருதல்)

பணி : ஏனம்மா ?

முத்த : தமிழரசனை மேன் மாடத்துக்கு அழைத்துச்செல்; வைரமன்றத்தில் அமரச்சொல்; சிவகாமியிடம் தமி ழரசன் வந்த செய்தியைக் கூறு.

[பணியாள் தமிழரசனை மேன்மாடத்துக்கு அழைத்துச் செல்கிருன். முத்தம்மையார் தமிழரசனை எந்த வைரமன்றத்துக்கு அழைத்துச் செல்லும்படி கூறினளோ அதே வைர மன்றத்

தில் ஊசலாடிய உள்ளத்தோடு உட்கார்ந்திருக்கிறாள் சிவகாமி. உள்ளே நுழைந்த தமிழரசன் கடற்கரையிலே சந்தித்த காதலனாக இருக்கக் கண்டு திடுக்கிடுகிறாள். தமிழரசனும் சிவகாமியைக் கண்டு திடுக்கிடுகிறான் ]

**மணி :** அடடே சிவகாமியம்மா இங்கேயே இருக்கிறாங்களே. இனி எனக்கு என்னங்க வேலை. நான் வரட்டுங்களா?

**(போய் விடுகிறான்)**

**சிவ :** (வியப்போடு)...நீங்களா!

**தமிழ :** (திகைப்போடு) நீயா!

**சிவ :** நீங்கள்...?

**தமிழ :** ஐயம் வேண்டாம் கண்ணே; நான்தான் உன் அத்தான் தமிழரசன்.

**சிவ :** நீங்கள் என் அத்தானா? நம்பவே முடியவில்லை... பிழைத்தேனத்தான்.

**தமிழ :** என்னாலுந்தான் நம்ப முடியவில்லை என் அகத்தில் நிறைந்தவளே அத்தை மகளாக இருப்பாளென்று... சிவகாமி!

**சிவ :** அத்தான்.

**தமிழ :** (அவளை நெருங்கிய வண்ணம்) சிவகாமி! உன்னைப் பார்த்ததுமே என் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டேன்.

**சிவ :** நானுந்தான் அத்தான். என் மகிழ்ச்சியை, என் இதயத்தே தோன்றும் இன்பப் பெருக்கை எப்படிக் கூறுவதென்றே தெரியவில்லை.

**தமிழ :** அதுதான் கண்ணே உண்மையான காதல். எழிலோவியமே! என் இதயத்தைக் கவர்ந்துவிட்ட காவியமே! என்னை மறந்துவிட மாட்டாயே?

**சிவ :** உய்ய வழிகாட்டும் தெய்வமே! உண்மை மிகு பேரொளியே! இது நான் கேட்கவேண்டிய கேள்வியல்லவா?

## காட்சி 7.

(எழிலன் கடற்கரையிலே உட்கார்ந்திருக்கிறான். அவனைப் பார்த்தும் பாராதவள் போலச் செல்லுகிறாள் அல்லி.)

**எழில்:** அங்கே போவது யார்?

**அல்லி:** (திரும்பிப் பார்த்து) ஏன் என்ன வேண்டும்?

**எழில்:** ஓ........ ஓடக்காரப் பெண்ணு!

**அல்லி:** ஓ........ ஓடக்கார ஆணு!

**எழில்:** (மெதுவாய்) உன்னைப் போன்ற ஒரு அழகி ஓடக்காரியாக இருக்கும்போது நான் ஓடக்காரனாக இருக்கத் தயங்கவா போகிறேன்.

**அல்லி:** என்ன முணங்குகிறீர்கள்?

**எழில்:** ஒன்றுமில்லையே!

**அல்லி:** நான் ஒன்றும் ஓடக்காரியல்ல. பெருவணிகர் மகள்.

**எழில்:** நானும் ஒன்றும் ஓடக்காரனில்லை. முத்து வணிகர் மகன்.

**அல்லி:** (வியப்போடு) அப்படியா!

**எழில்:** பெண்ணே!

**அல்லி:** என்ன?

**எழில்:** உன் பெயரென்ன?

**அல்லி:** அல்லி.

**எழில்:** (வியப்போடு ரசித்தவண்ணம்) அல்லி...ஆகா!

**அல்லி:** ஏனிப்படி வியப்படைகிறீர்கள்? பெயர் நன்றாக இல்லையா?

**எழில்:** பெயர் நன்றாகத்தான் இருக்கிறது. பெயர் அழகாக இருந்தால் மட்டும் போதுமா?

அல்லி : நான் அழகாக இல்லை யென்கிறீர்களா?

எழில் : ஏன் இப்படி அவசரப்படுகிறாய்? பெயர்கள் அழகாக இருப்பதோடு அவை பொருத்தமானவர்களுக்கும் சூட்டப்படவேண்டும். அவலட்சணமே உருவான ஒருத்திக்கு அதிரூபசுந்தரி என்று பெயர் சூட்டினால் நன்றாகவா இருக்கும்? காக்கைக் குரலுடைய கன்னி யொருத்திக்குக் கானசரசுவதி என்று பெயரிட்டால் பொருத்தமாகவா இருக்கும்? பொருள் பொதிந்த பெயர்கள் பொருத்தமான ஆட்களுக்குச் சூட்டப் பெற்றால் பொன் மலர் மணம் பெற்ற தன்மையை அடைந்து விடுகின்றன.

அல்லி : நீங்கள் சொல்வது.......................

எழில் : புரியவில்லையா? நீ மணம் மிக்க பொன்மலர் என்று சொல்லுகிறேன்.

அல்லி : அழகாகப் பேசுகிறீர்களே!

எழில் : என் அருமை நண்பனிடம் கற்ற வித்தை அது.

அல்லி : உங்கள் நண்பர் எப்படியிருக்கிறார்?

எழில் : "அகத்தைக் கவர்ந்தவளே அத்தை மகளாக இருக்கிறாள்...அத்தை மகளாக இருக்கிறாள்" என்று புலம்பிக்கொண்டே அந்தப்பெண்ணைச் சுற்றிச்சுற்றி வருகிறான்.

அல்லி : உங்களுக்கு ஒருத்தியும் கிடைக்கவில்லையா சுற்றிச் சுற்றி வருவதற்கு? நீங்கள் யாரையும் காதலிக்கவில்லையா?

எழில் : இப்போதுதான் காதலிக்க ஆரம்பித்திருக்கிறேன்.

அல்லி : ஆரம்பித்திருக்கிறீர்களா?

எழில் : ஆமாம்? நீ ஏன் திகைக்கிறாய்?

அல்லி : (கலக்கத்தோடு) ஒன்றுமில்லை. அவள் பெயரென்ன? அவள் எங்கே இருக்கிறாள்?

**எழில் :** அதைக் கூறத்தானே பயமாக இருக்கிறது.

**அல்லி :** பயமா. உங்களுக்கா? ஐயையோ உங்களுக்கு வெட்கமாயில்லை. பெரிய ஆண்சிங்கம்போலக் கர்ஜிக் கிறீர்கள்?

**எழில் :** சந்தேகமே வேண்டாம். நான் ஆண் சிங்கம் தான். இந்த ஆண்சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டு ஆண்சிங்கங்கள் தானே அஞ்சுகின்றன. அந்தப் பெண் சிங்கம் மிஞ்சுகிறதே தவிர அஞ்சவில்லையே என்ன செய்யலாம?

**அல்லி :** நீங்கள் விரும்பும் பெண் ரொம்பப் பொல்லாத வளோ?

**எழில் :** ரொம்பப் பொல்லாதவள் மாதிரிதான் இருக் கிருள். அவளும் என்னை விரும்புவாள் என்று எண் ணிக்கொண்டு அவளைப்பற்றி ஏதாவது உன்னிடம் சொல்லிவிட்டால் அவள் சீறிவிழுந்தால், நான் என்ன செய்வது?

**அல்லி :** ஐயோ! பாவம்! அப்படிப்பட்ட பெண்ணை ஏன் காதலித்தீர்கள்?

**எழில் :** என்னசெய்வது! காதலுக்குத்தான் கண்ணில் லையே; தெரியாமல்தான் அந்த வாயாடியைக் காத லித்துவிட்டேன்.

**அல்லி :** பரவாயில்லை. சொல்லுங்கள். நான் யாரிடமும் சொல்லமாட்டேன்.

**எழில் :** சொல்லமாட்டாயே.

**அல்லி :** நிச்சயமாகச் சொல்லமாட்டேன்.

**எழில் :** அவள் பெயர் (தயங்குதல்)

**அல்லி :** அவள் பெயர்.........?

**எழில் :** சொல்லிவிடட்டுமா?

**அல்லி :** சொல்லுங்களென்ருல்...........

எழில் : அவள் பெயர்...........அல்லி.

அல்லி : அப்பா....பிழைத்தேன்.

எழில் : நீ பிழைத்திருந்தால் தானே கண்ணே நானும் பிழைத்திருக்கமுடியும்.

அல்லி : அன்பரே உங்களைக் கண்டதுமுதல் புத்தம் புதியதோர் உணர்ச்சிபெற்றேன. பித்தம் கொண்டேன். சித்தம் மருண்டேன். உங்களை இனிப் பிரியேன் என்னை நீங்கள் பிரிந்தால் உயிர் தரியேன். என்ன கண்ணாளா.

எழில் : (அவளை அணைத்தவாறு) சரி கண்ணே.

---

## காட்சி 8.

தமிழ : நண்பா, என் அகத்தில் நிறைந்த அந்த அற்புத அழகியே என் அத்தை மகளாக இருப்பாளென்று நான் கனவிலும் கருதவில்லை.

எழில் : அதை நினைத்தால் எனக்குக்கூட வியப்பாகத் தானிருக்கிறது.

தமிழ : எழில், உன் காதல் எப்படியிருக்கிறது ?

எழில் : என் காதலா ? ஏன், என் காதலுக்கென்ன? நான் மட்டும் தோல்வியடைந்து விடுவேன் என்று எண்ணினையா ?

தமிழ : தோல்வியா, சே, சே ! தமிழினம் காணுத ஒரு சொல். நம் பகைவர்களுக்காக அல்லவா நம் முன்னோர்கள் அச்சொல்லைப் படைத்து வைத்திருக்கிருர்கள்.

எழில் : உண்மைதான் தமிழரசா. கடற்கரைக்குச் சென்றேன். என் காதலியைக் கண்டேன். அல்லியே ! என் அகத்தைக் கவர்ந்தவளே ! நகராதே, நில்

என்றேன். நின்ருள். நீ என்னைக் காதலிக்கிருயா இல்லையா. சொல், விரைவாகச் சொல். சொல்லாவிட்டால் இந்தக் கடலிலே விழுந்து........

தமிழ: நம்பமாட்டேன். நம்பவேமாட்டேன். ஏண்டா, நீயா இப்படிப் பேசினுய்? உனக்குக்கூடவா வீரம் பேசத் தெரிகிறது?

எழில்: மீதத்தையும் கேள் அப்பா. இந்தக் கடலிலே விழுந்துவிடுவேன். ஆனுல், என் பட்டாடைகள் நனைந்துபோகுமே என்றுதான் பயப்படுகிறேன். எனவே, பெண்ணே என் பட்டாடைகள் நனைந்து போவதற்கு முன் உன் பதிலை எதிர்பார்க்கிறேன் என்றேன்.

தமிழ: (சிரிப்பு) பிறகு........

எழில்: பிறகு என்ன? அத்தானே. என் னரு மை க் காதலரே, பெருமைக்குரியவரே, நீங்கள் விழலாமா? விழுந்தால் நல்ல ஆடைகள் நனைந்துதான் போகும். விழுந்துவிடாதீர்கள். நான் உங்களைக் காதலிக்கிறேன் என்று கையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினுள். அம்மட்டில் விட்டாளா? அன்பரே உங்களைக் கண்டது முதல் புத்தம் புதியதோர் உணர்ச்சி பெற்றேன். பித்தம்கொண்டேன். சித்தம் மருண்டேன். உங்களைப் பிரியேன். நீங்கள் என்னைப் பிரிந்தால் உயிர்தரியேன் என்ருள் அந்த எழிலரசி. எப்படி என்னுடைய காதல் கதை?

தமிழ: இவ்வளவு நேரமாகக் கூறியதெல்லாம் கதைதானு?

எழில்: கற்பனை விவகாரங்களை எல்லாம் நீயே வைத்துக் கொள். நான் கூறியது கற்பனைக் கதை அல்ல நடந்த கதை.

தமிழ: பொருள் ஈட்டி வந்தோம்; பொருத்தமான பெண்களையும் தேடிவிட்டோம்.

**எழில் :** இனியென்ன? மங்கள இசைகள் முழங்க மாங்கல் யங்களை நாம் விரும்பிய மங்கையர்களின் கழுத்துக் களிலே கட்டவேண்டியதுதான்.

**தமிழ :** நண்பா! எல்லோரும்தான் தாலிகட்டுகிருர்கள். ஆனல் எல்லோருடைய இல்லறமும் நல்லறமாக இருப்பதில்லை. மனம் ஒன்றிய நாம் கட்டப்போவது தாலிக்கயிறு மட்டுமன்று. **அன்புக் கயிறு**மாகும. இல்லையா?

**எழில் :** உண்மைதான், தமிழரசா.

---

## காட்சி 9.

[சோழ மன்னன் அரசவை மன்னனும் அமைச் சரும் மற்ற மக்களும் கூடியிருக்கிருர்கள். தமிழ்ப் பாடல் பாடப்படுகிறது. பாடலுக்கேற்பத் தை யலர் ஆடலும் நடைபெறுகின்றது. ஆடலும் பாடலும முடிந்தபின்னர் படை வீரன் ஒருவன் உள்ளே வருகின்ருன்.]

**படை :** மன்னவ! கன்னி நாட்டிலிருந்து தூதுவன் ஒருவன் வந்திருக்கிருன்.

**மன்னர் :** வரச் சொல்...

**(தூதுவன் அவைக்கு வந்து அரசரைப் பணிந்து)**

**தூது :** பொன்னி நாடு காக்கும் மன்னவ! நான் கன்னி நாட்டுத் தூதுவன். எம் அரசர் அனுப்பிய திருமுகத் தோடு வந்திருக்கிறேன்.

**(மாற்ருனது திருமுகத்தைப் படித்துப் பார்த்த அமைச்சர் சீற்றத்தோடு பேசுகிருர்)**

**அமை :** பொன்னி நாடு புரக்கும் மன்னவ! கன்னி நாட்டு மன்னவன் இனித் திறைப்பொருள் கட்டமுடியாதாம். அது மட்டுமல்ல கடந்த சில ஆண்டுகளாக அவன் தந்தை கட்டிவந்த திறைப் பொருளையும் திருப்பி அனுப்ப வேண்டுமாம்.

**மன்ன :** (சினம் பொங்க) இல்லையென்றால்......

**அமை :** போர் தொடுப்பானும் புல்லன். புலிக்கொடி யென்றதுமே மன்னர்களெல்லாம் கிலியடைவார்கள். புதிதாகப் பட்டத்துக்கு வந்த சிறுவன் புலம்புகிறான் அரசே! புலம்புகிறான்.

**மன்ன :** புள்ளி மான் புலியை எதிர்க்கிறது அமைச்சரே! அதை வீசுங்கள். திருமுகமாம் திருமுகம். நீயவனனுப்பிய ஓலைக்குப் பெயர் திருமுகம். தூதுவனே! உன அரசனைப் போர்க்களத்தில் சந்திக்கும்படி சொல். போ!

**(தூதுவன் போய்விடுகிறான். பின் அரசர் அமைச்சரை நோக்கி)**

**மன்ன :** அமைச்சரே! கன்னி நாட்டாரோடு போர் செய்யப் புறப்படும்படி முரசறையச் சொல்லுங்கள்.

**அமை :** ஆணை அரசே.

---

## காட்சி 10.

**(சோலையிலே தமிழரசனும் சிவகாமியும் சந்திக்கின்றனர்)**

**சிவ :** அன்பே!

**தமிழ :** ஏன் கண்ணே!

**சிவ :** ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்?

**தமிழ :** (அவளுடைய அழகிய முகத்தை இரு கைகளாலும் தாங்கி) அதுதான் எனக்கும் புரியவில்லை என்ன செய்வேன். ஒருகணம்கூட உன் மலர் முகத்தைக் காணாமலிருக்க முடியவில்லையே. கண்ணே உன் களையான முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாலே போதும். ஆனால் சிவகாமி........

**சிவ :** என்ன அத்தான்!

**தமிழ ;** சில சமயங்களில் உன்னைப் பார்க்கும்போது துன்பம் வந்து சூழ்ந்துகொண்டுவிடுகிறது.

**சிவ:** (துடிப்போடு) ஏன் நான் என்ன அவ்வளவு குரூபியா?

தமிழ: அன்பே! அவசரப்படுகிருயே, பார்க்காமலே இருந்துவிடலாமென்ருலோ என் உயிரே போய்விடும போலிருக்கிறது.

சிவ: என்ன அத்தான்? பார்த்தால் துன்பம் வந்துவிடுகிறது. பார்க்காவிட்டால் உயிர் போய்விடும்போலிருக்கிறது. ஒன்றுமே புரியவில்லையே.

தமிழ: கூறினல் கோபிக்கமாட்டாயே.

சிவ: கோபிக்கமாட்டேன்.

தமிழ: நிச்சயமாக!

சிவ: நிச்சயமாக.

தமிழ: (அவளை நெருங்கி அணைத்தவண்ணம்) கண்ணே, பண்டைத் தமிழகத்துப் பாவையரின் பண்பை நினைவூட்டும் உன் அன்பை, பசுந்தளிர் போன்ற மேனியை, பாகு போன்ற இன்சொல்லை, முல்லை முறுவலை, மோனப் பார்வையைப் புகழ்ந்துபாடக் கவிஞனய்ப் பிறக்கவில்லையே, சிவகாமி.

சிவ: (கிண்டலாக) ஐயோ! அப்புறம்.

தமிழ: நீ பெண்மைக்கு இலக்கணம், பேரின்பப் பெட்டகம், காணுகின்ற மாந்தரைக் கவருகின்ற காந்தம், கன்னித் தமிழகத்துக்கு உன்னைக் கவின்பெறு சிலையாக வடித்துத் தர நான் சிற்பியாகவும் பிறக்கவில்லை.

சிவ: இன்னும் ஏதாவது.......

தமிழ: இருக்கிறது அனபே. உன் செம்மைசேர் மேனியை சிங்கார நோக்கை, அங்கப் பொலிவுகளை அழகு பெறப் படமெழுத நான் ஓவியமும் கற்கவில்லை.

சிவ: (தன் மலர்க் கரங்களால் அவன் தலையைக் கோதியவாறு உணர்ச்சியோடு) அத்தான்!

தமிழ: சங்கத் தமிழே, சரியாத பேரழகே, மங்காத பெருநிலவே, மகிழ்வளிக்கும் தென்றலே, பொங்கிவரும் தேனமுதே, பொலிவுடைய மணமலரே, நீயே என் இன்பத் திருவீடு; இதயத்து ஒளி விளக்கு. சிவகாமி.......

**சிவ:** அத்தான்! உங்கள் கவிதை நடைகேட்டு. இந்தப் புவியே மயங்கிவிடும். உங்கள் பேச்சு அமிழ்தமென இனிக்கிறது.

**தமிழ:** அமிழ்தமென இனிப்பதுதான் கண்ணே நம் தமிழ் மொழியின் தனிச்சிறபபு ......... (முரசொலி கேட்கின்றது.)........முரசறையப் படுகின்றதே.

[ அதை யறியத் தமிழரசன் செல்கிருன் ]

## காட்சி 11.

[ புகார் நகரத்தின் வீதிகளிலே போர்ச் செய்தி பற்றி ஒரு வீரன் முரசறைந்து செல்லுகிருன் ]

**முரசறைவோன்:** மானங் காக்கும் மறக்குடி மக்களே போர்! போர்!! கன்னி நாட்டுக் கடையன், அவன் பொன்னி நாட்டோடு போர் செய்ய விரும்புகிருனும் புறப்படுங்கள்! புல்லனையழிக்கப் புறப்படுங்கள்' போர்! போர்!!

( முரசறைகிருன் )

---

## காட்சி 12.

[ சிவகாமி சோலையிலே உட்கார்ந்திருக்கிருள். தமிழரசன் போர்க்களம் செல்கிருனே என்ற வருத்தம் அவளுக்கு. போர்க்கோலம் பூண்ட தமிழரசன் அங்கே வருகிருன் பின்புறமிருந்த வாறே அவள் கண்களைப் பொத்துகிருன் ].

**தமிழ:** சிவகாமி, சிவகாமி!

**சிவ:** ( ... மௌனம் ... ).

**தமிழ:** சிவகாமி என்னைப்பார், உடலிலே தளபதிக்கேற்ற உடுப்புகள், இடையிலே வாள் நன்ருக இருக்கிறதா? பார் கண்ணே, கோபமா சிவகாமி?

[ அவளை அன்போடு அணைத்து ]

என்ன கண்ணே! ஏன் வருத்தம்?

**சிவ :** (கண்ணீர் கலங்க) போர்க் களத்திற்குப் போகிறீர்களாமே?

**தமிழ :** (சிரிப்பு) என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா? போகிறேன்; இதற்கா வருத்தம்? களத்திலே கணவனும் பிறரும் பட்டனர் எனக்கேட்டுக் கடுஞ்சினங் கொண்டு, பால்மணம் மாறாத பச்சிளங் குழந்தையின் கையிலே வேலினைக் கொடுத்து மாற்றானை மாய்க்கக் களத்துக்கு அனுப்பினாளே வீரத்தாய்: அவள் வழி வந்த நீ உன் காதலன் களம் செல்கிறான் என்று கேட்டுப் பூரிப்படைய வேண்டும்; ஆனால் நீயோ களம் செல்லுவது கேட்டுக் கலங்குகிறாய்; வெட்கம் சிவகாமி வெட்கம்!

**சிவ :** எத்தனையோ வீரர்கள் இருக்கும்போது நீங்கள் ஏன் போகவேண்டும்?

**தமிழ :** எல்லோரும் அப்படியே எண்ணிவிட்டால் யார் போருக்குப் போவது?

**சிவ :** நீங்கள் போர்க்களம் போய்......

**தமிழ :** என்ன செய்யப் போகிறீர்கள் என்கிறாயா? பொருள் தேடும் வணிகனுக்குப் போர்க்களத்தில் என்னவேலை என்கிறாய்? அப்படித்தானே கண்ணே. தமிழரசன் போர்க்களம் சென்றான்: புல்லரை யழித்தான்: புகழ் பல கொண்டான் என்று உன் காதலனின் வீரத்தை, விவேகத்தை மக்கள் புகழ்ந்தால் உனக்குப் பெருமை யில்லையா? என்ன கண்ணே?

**சிவ :** உண்மைதான் அத்தான்!

**தமிழ :** புதுமண மலரே! பொதியமலைத்தென்றலே! விரைவிலே வெற்றிவாகை சூடி வருகிறேன்.

**சிவ :** வெற்றியோடுவாருங்கள். மணம் மிக்க மலர்களால் மாலை தொடுத்து வைக்கிறேன் உங்களை வரவேற்பதற்கு!

## காட்சி 13.

[அரண்மனையின் முன்னுள்ள பரந்த மைதானம். சோழநாட்டின் நால்வகைப் படைகளும் அங்கே அணிவகுத்து நிற்கின்றன. தலைமைத் தளபதியும், அமைச்சரும, நால்வகைப் படைத் தளபதிகளையும் அவர்தம் படை அணிவகுப்புக்களையும பார்வை யிடுகிறார்கள். குதிரைப் படைத் தளபதியாகிய **தமிழரசனை** அணுகி]

**தள :** தமிழரசா! கன்னி நாட்டவன் கொட்டத்தை யடக்கிப் புலிக் கொடியை உயர்த்தி வெற்றி முரசு கொட்டிவர வேண்டும்.

**தமிழ :** ஆணை தளபதியாரே

[பிறகு வீரர்களை நோக்கித் தமிழரசன் பேசுகிறான். அதுகண்டு அமைச்சரும் தளபதியாரும் அகமகிழ்ந்து நிற்கின்றனர்]

வெற்றி அல்லது வீர மரணம் என்ற எண்ணத்தோடு வந்திருக்கும் சோழ குலச் சிங்கங்களே, உங்கள ஒளிபடைத்த முகங்கண்டு உவப்படைகின்றேன். மறக்குடி வீரர்களே! மானங்காக்கும் தோழர்களே! பெண்ணை மட்டுமல்ல, மார்பிலே ஏற்படும் புண்ணையும் விரும்புவான் வீரம்படைத்த ஆண்மகன்.

சிந்தை கவர்ந்தவளின் செங்கனி வாய்ச் சிரிப்பை மட்டுமல்ல. மாற்றானின் மார்பிலே ஒழுகும் செங்குருதியையும் ரசிக்கத் தெரியும் வீரனுக்கு.

வைரம், வைடூரியம் இவற்றின் ஒளியை மட்டுமல்ல; வாளின், வேலின் ஒளியையும கண்டு களிக்கத் தெரியும் அந்தப் போர் மறவனுக்கு.

கண்ணே! கருமணியே! என்று காதல் மொழி பேச மட்டுமல்ல; மாற்றானை "நீ தோற்றோடவேண்டும். இல்லையேல் நான் இக்களத்திலே மடிந்துவிடவேண்டும்" என்று வஞ்சினம் கூறவும் தெரியும் வாளேந்தியவனுக்கு.

மாற்றானின் சிற்றத்தைக் கண்டு நாம் மண்டியிட்டா கிடப்பது? மறத்தமிழ் வீரர்களே, புறப்படுங்கள். கையிலே வாள், கருத்திலே வீரம். பருந்து உலவும் களத்திலே வெற்றி. இதுதான் தமிழரின் தலையாய கொள்கை; நிலையான அரசியல்! விலையில்லாச் சரித்திரம்.

புறப்படுங்கள்! புல்லனை அழிப்போம். புகழொடு திரும்புவோம்!! மன்னர் வாழ்க!

**வீரர்:** வாழ்க! வாழ்க!!

**தமிழ:** பொன்னி நாட்டின் புகழ் வாழ்க!

**வீரர்:** வாழ்க! வாழ்க!!

[படைகள் புறப்படுகின்றன. வீரர்கள் " தளபதி தமிழரசர் வாழ்க! வாழ்க!!" என்றும் மன்னரும் மற்றையோரும் 'வாழக!' வென்றும் முழங்கிக் கொண்டே செல்கிறார்கள்]

## காட்சி 14.

(வைரவணிகர் தம் சகோதரி முத்தம்மையாரைக் காண வருகிறார்)

**முத்த:** வா தம்பி வா. நேற்றே வருவாயென்றிருந்தேன்.

**வைர:** நேற்று வரவேண்டுமென்றுதானிருந்தேன் அக்கா. சாவக நாட்டிலிருந்து ஒருவணிகர் வந்திருந்தார். எனவேதான் நேற்று வரமுடியவில்லை.

**முத்த:** தம்பி, சிவகாமியும் பெரிய பெண்ணாகிவிட்டாள். தமிழரசனும் வந்துவிட்டான். தமிழரசன் போரிலிருந்து வந்ததும் திருமணத்தை முடித்துவிட வேண்டியதுதான்.

**வைர:** ஆமாம் அக்கா.

**முத்த:** தம்பி, மற்றொரு செய்தி.

**வைர:** என்னக்கா?

**முத்த:** எனது கணவர் தேடிய திரண்ட செல்வங்கள் அனைத்தையும் சிவகாமிக்கே உரிமையாக்கி விடுவது என்று தீர்மானித்துவிட்டேன்.

**வைர:** (வியப்போடு) அத்தனை செல்வங்களையுமா?

**முத்த:** ஆம் தம்பி என் ஒரே செல்வம் அவள் தானே!

**வைர:** நல்ல தீர்மானந்தான் அக்கா: இமயம் முதல் குமரிவரை பரந்துகிடக்கும் இந்த நாட்டிலே அத்தானைப்போல் பொருளீட்டி நவரத்தினங்களை மலை மலையாகக் குவித்த ஒரு பெருவணிகரை நான் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. அத்தனை செல்வங்களும் சிவகாமிக்கு உரிமையாவதை; நினைத்தால் பெருமகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆனால்......

**முத்த:** என்ன தம்பி ..........?

**வைர:** அக்கா உங்களிடம் இருக்கும் செல்வம் அளவிட முடியாதது. சிவகாமியோ சிறு பெண். திரண்ட செல்வத்தைக் கண்டதும் அவள் மனம் மருண்டுவிடாமல், மாறிவிடாமலிருக்கவேண்டுமே. செல்வம் சிந்தையை மாற்றும் தன்மையுடையது என்பது தங்களுக்குத் தெரியாதது அல்லவே.

**முத்த:** உண்மைதான் தம்பி; ஆனால் சிவகாமி பத்தரை மாற்றுப் பசும்பொன். அவள் மனமா மாறிவிடும் என்றெண்ணுகிறாய்?

**வைர:** ஏதோ எனக்குப் பட்டதைச்சொன்னேன்; பெரியவர்களாகிய நீங்கள் பார்த்து எது செய்தாலும் சரிதான். நான் போய்வரட்டுமா அக்கா?

**முத்த:** சரி தம்பி.

---

## காட்சி 15.

(முத்தம்மை பொன்னும் மணியும் நிறைந்திருக்கும் புதுமனைக்குச் சிவகாமியை அழைத்துச் செல்லுகிறாள்)

**முத்த:** சிவகாமி

**சிவ:** ஏன் பெரியம்மா

**முத்த:** இங்கே பார்த்தாயா கண்ணு? (வைரங்கள் குவிந்துகிடக்கும் ஒரு பகுதியைக் காட்டி) இவை அனைத்தும் வைரங்கள்.

**சிவ:** (வியப்பே உருவாகின்ருள்) ஆ! இதென்ன பெரியம்மா? வைரம் மலைபோலல்லவா குவிந்து கிடக்கிறது! கண் கூசுகிறதே!!

**முத்த:** இதுமட்டும்தான் என்று நினைக்கின்ருயா? வா இதோபார்; இவையனைத்தும் வைடூரியங்கள், அதோ கோமேதகங்கள், நீலங்கள், பச்சைகள், இங்கு வா, பார்த்தாயா? இவையனைத்தும் தங்கக்கட்டிகள்.

**சிவ:** நம்பவே முடியவில்லை! நான் காண்பதெல்லாம் கனவா?

**முத்த:** கனவுதான் கண்ணே.

**சிவ:** பெரியம்மா! பெரியம்மா; இவையெல்லாம் உனக்கு ஏது?

**முத்த:** இவை அனைத்தும் உன் பெரியப்பா தேடியவை.

**சிவ:** பெரியம்மா! எனக்கு இரண்டுமாலைகளுக்கு வைரம் தருகிருயா? இந்த வைரங்களால் ஆன மாலையை நான் அணிந்துகொள்ளவேண்டும்; அதை அத்தான் பார்க்கவேண்டுமென்று ஆசையாய் இருக்கிறது பெரியம்மா.

**முத்த:** அசட்டுப் பெண்ணே! உன்னைத் தவிர வேறு யார் இருக்கிருர்கள் எனக்கு? எனக்கும் வயதாகிவிட்டது. அதனுல் என்னுடைய செல்வங்கள் அனைத்தையும் உனக்கே உரிமையாக்கிவிட்டேன்.

**சிவ;** எனக்கா! உண்மையாகவா! இவை எல்லாவற்றையுமா!!

**முத்த:** மயங்கி விழுந்துவிடாதே கண்ணே.

**சிவ:** மயக்கம் வந்துவிடும்போல்தான் இருக்கிறது. இவ்வளவு செல்வங்களும் எனக்கா? நான் இன்று முதல் கோடீஸ்வரி. அப்படித்தானே அம்மா?

**முத்த:** அதிலென்ன கண்ணே சந்தேகம்.?

## காட்சி 16.

[கன்னிநாட்டானைத் தமிழரசன் களத்திலே சந்திக்கிறான். கடும் போர் நடைபெறுகிறது. முடிவில் பொன்னிநாட்டுப் படைகளே வெற்றி பெறுகின்றன. புலிக்கொடி வானளாவப் பறக்கின்றது. வெற்றிக் களிப்போடு சோழ நாட்டுப் படை வீரர்கள் நாடு திரும்புகிறார்கள்]

---

## காட்சி 17.

[செல்வங்கள் அனைத்தையும் சிவகாமிக்கு உரிமையாக்கிய முத்தம்மை எதிர்பாராத நிலையிலே இறந்துவிடுகிறாள். செல்வக் குவியல்களைக் கண்ட சிவகாமியின் மனம் மாறிவிடுகிறது. திரண்ட செல்வம் தன்னிடம் இருப்பதை உலகம் அறிய வேண்டும் என விரும்புகிறாள். எனவே தன்னிடம் கோடிக்கணக்கான செல்வம் இருக்கிறது, அதற்கேற்ப எவன் சமமாகப் பொருள் கொண்டு வருகிறானோ அவனையே மணப்பேன் என்று முரசறையச் சொல்வது என முடிவு செய்கின்றாள். அவள் முடிவு கேட்ட அல்லி துடிக்கிறாள்.]

**அல்லி :** சிவகாமி உன் முடிவை நீ மாற்றியே ஆகவேண்டும்.

**சிவ :** ஏனடி மாற்ற வேண்டும்?

**அல்லி :** ஏனடி மாற்ற வேண்டும்? இப்படிக் கேட்க உனக்கு வெட்கமாயில்லை? திரண்ட செல்வம் உன் மனத்தை மாற்றிவிட்டது.

**சிவ :** இதில் என்னடி தவறு? என்னிடம் இருக்கும் செல்வம் இமயம் முதல் குமரி வரை வேறு யாரிடமும் இல்லையென்று சொல்லுகிறார்கள். அதை இந்த உலகம் அறிய வேண்டும். என்னைக் கோடீஸ்வரி என்று புகழ வேண்டும். அதனால்தான் என்னிடம்

உள்ள செல்வத்திற்கேற்ப எவன் பொருள் வைத்திருக்கிருனே அவனையே மணக்க முடிவு செய்திருக்கிறேன் என அறிவிக்கப்போகிறேன். (தனக்குத் தானே) பெரியம்மா இருக்கும்பொழுதுதான் இந்தச் செல்வங்கள் எல்லாம் அறைகளில் முடங்கிக் கிடந்தன. அவள் இருக்கும்பொழுதே இச்செல்வங்களைப் பலரும் புகழும்படி செய்யவேண்டும் என்பது என் எண்ணம். அவள்தான் போய்விட்டாளே, என் எண்ணம் இனியாவது நிறைவேறட்டும்.

**அல்லி:** உன் அத்தானையே மணப்பேன் என்று பேசினுயே அன்று?

**சிவ:** யார் இல்லையென்ருர்கள்? இப்பொழுதுதான் என்ன? என்னிடமுள்ள பொருள்களுக்குச் சமமாக எவனடி பொருள் வைத்திருக்கப்போகிருன்? கடைசியில் அத்தானைத்தான் மணப்பேன்.

**அல்லி:** அவர்மேல் உனக்கு உண்மை அன்பிருந்தால் எதற்காக இந்த நாடகமாடுகிருய்?

**சிவ:** அதுதான் சொல்லுகிறேனே. என்னிடம் கோடிக்கணக்காகப் பொருள் குவிந்து கிடப்பதை இந்த உலகம் அறிய வேண்டும்; அதுதான் என் எண்ணம்.

**அல்லி:** தவருன எண்ணம்.

**சிவ:** அது உன் முடிவு. சீதை ராமனிடம்தான் தன் சிந்தையைப் பறிகொடுத்தாள். சுயம்வரம் ஏன் நடந்தது? தமயந்தி நளனைத்தான் காதலித்தாள். சுயம்வரம் ஏன் நடந்தது? பல தேச மன்னர்கள் வந்தார்கள். பாவையைப் புகழ்ந்தார்கள். ஆனுல் தோற்ருர்கள். அதுபோல இதுவும் ஒரு சடங்கு. என் திரண்ட செல்வத்தைப் பிறரறிய ஓர் வாய்ப்பு. அவ்வளவுதான்.

**அல்லி:** உன் மகிழ்ச்சிக்காக அவர் உள்ளத்தை வதைக்கப்போகிருய்...... அப்படித்தானே ....?

**சிவ :** அதெல்லாம் இல்லையடி. நீ யேன் இதற்காக வருந்துகிறாய்? உன் காதலனைப் பார்க்கப் போக வில்லையா? பாவம் காத்திருக்கப் போகிறார்!

**அல்லி :** என் காதலரும்தான் களத்திற்குச் சென்றிருக் கிறார், என்றாலும் போகிறேன். நீ காணத்தான் கணக்கற்ற பொருள் குவிந்துகிடக்கிறதே. அதைப் பார்த்துப் பார்த்து மகிழவே உனக்குப் பொழுது பொதவில்லையே!

(அல்லி போய்விடுகிறாள். சிவகாமி மீண்டும் செல்வக் குவியல்களைப் பார்க்கப் போகிறாள்.

---

## காட்சி 18.

காவிரிப்பூம்பட்டினம். எங்கும் கண் கொள்ளாக் காட்சி. சோழநாடு வென்றது என் பதை யறிந்த மக்கள் மகிழ்ச்சிக்கு எல்லை யேது? மாடங்கள் எங்கும் மகர தோரணங்களும் மணி களும் நிறைந்து விளங்குகின்றன. வீதிகளெல் லாம் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மக்கள், வெற்றி பெற்று வந்த வீரர்களை வரவேற்று வாழ்த்துக் கூறுகிறார்கள். தளபதி தமிழரசர் வாழ்க! மன்னர் வாழ்க! சோழநாடு வாழ்க! என்று களிப்பால் ஆரவாரம் செய்கிறார்கள். தமிழரசன் அரண்மனையை அடைகிறான். மன்னர், அமைச்சர், தலைமைத் தளபதி முதலியோர் அனைவரும் வரவேற்கிறார்கள். மன்னர் தமிழரச னைப் பாராட்டிப் பேசுகின்றார். வீரவாள் பரிசளிக் கிறார். வெற்றி விழா முடிந்ததும், தமிழரசனும், எழிலனும் தேரிலே வீட்டிற்கு வருகிறார்கள். ஏன் என்று நமக்கா தெரியாது? காதலிகளைக் காணத்தான். ஆனால் சிவகாமியின் சிந்தை மாறியதைப் பாவம்! தமிழரசன் எப்படி அறிவான்?

## காட்சி 19.

[தமிழரசனும் எழிலனும் செல்லும் தேர் நாற்சந்தி ஒன்றைக் கடக்கின்றது. அப்பொழுது முரசறையும் ஒலி கேட்டுத் தமிழரசன் தேரை நிறுத்துகின்றான். முரசறைவோன் கீழ்க் கண்ட செய்தியை அறிவிக்கிறான்.]

**முரசறை:** பெரு வணிகர் மனைவி முத்தம்மையார் அவர்கள் தாம் இறப்பதற்கு முன் தமது திரண்ட செல்வங்களை மருத வணிகர் மகள் சிவகாமி அம்மையாருக்கு உரிமையாக்கிவிட்டார்கள். சிவகாமி அம்மையாரிடம் இருக்கும் பொருளுக்குச் சமமாகப் பொருள்கொண்டு வருபவரையே சிவகாமி அம்மையார் மணப்பதென முடிவுசெய்திருக்கிறார்கள். மணம் பேச வருவோரிடம் சமமாகப் பொருள் இல்லையேல் அவர்கள் தங்கள் பொருளையும் இழக்க நேரிடும்.

(முரசை முழக்குகிறான்)

[இடி போன்ற இந்தச் செய்தியைக் கேட்டுத் தமிழரசன் தேரிலிருந்து மயங்கிக் கீழே விழுகின்றான். தமிழரசன் நிலையை யுணர்ந்த எழிலன் அவனைத் தேரிலே தூக்கிப் போட்டுக்கொண்டு இல்லத்தை அடைகிறான்.

---

## காட்சி 20.

**(தமிழரசன் சோகமே உருவாய்க் காணப்படுகிறான். எழிலன் துன்பத்தோடு பேசுகிறான்.)**

**எழில்:** தமிழரின் வீரத்தை இகழ்ந்தவனின், தருக்கித் திரிந்தவனின் செருக்கைத் தகர்த்து வந்தோம். மன்னர் மகிழ்ந்தார்; வீர வாள் பரிசளித்தார். அதை இடையிலே ஏந்தி, ஏறுபோல் நடந்து உன் இருதயத்தைக் கவர்ந்தவளைக் காணச் செல்வாய்; அவள் உதய சூரியனைக் கண்ட தாமரையென முகமலர்வாள்;

வரவேற்பாள்; வாழ்த்துக் கூறுவாள் என்றெல்லாம் எண்ணியிருந்தேன். எதிர்பாராத இடி நண்பனே, எதிர்பாராத இடி. சிவகாமியின் மனமா இப்படி மாறிவிட்டது? என்னால் நம்பவே முடியவில்லை!

(சிறிது நேர அமைதிக்குப் பின்) தமிழரசா! சிவகாமியை நேரிலே சென்று பார்த்து வா. உன்னைக் கண்ட பின்னும், உன் முகத்திலே விழித்த பின்னுமா உணராமல் இருக்கப் போகிறாள்?

**தமிழ:** (வரட்டுப் புன்னகை) உணர்வு...! முரசறையச் சொன்னபின் என் முகத்திலே விழிப்பதால் உணர்வு வந்துவிடுமா? செத்தவன் மீண்டும் பிழைப்பதில்லை. சிறகொடிந்த பறவை மீண்டும் பறப்பதில்லை; எழில்....! அவள் இதயமற்ற காதகியாகிவிட்டாள். அவளிடமிருந்தா இனி உணர்வை எதிர்பார்க்கிறாய்! விளம்பரம் செய்துவிட்டாள் வேறொருவன் வேண்டுமென்று! அந்த வினைகாரியின் முகத்திலே இனி நான் விழிப்பதா? என் உற்ற நண்பனாகிய நீ அதையா விரும்புகிறாய்?

**எழில்:** தமிழரசா...! சிவகாமி சிறு பெண்தானே? அறியாமல் தவறு செய்திருக்கலாமல்லவா? நான் உன் உற்ற நண்பன்தான். நான் சொல்லுவதற்காக ஒரு முறை நேரிலே சென்று பார்த்துவரக் கூடாதா? நீ படும் துன்பத்தை என்னால் சகிக்க முடியவில்லையே.

(தமிழரசன் வேண்டா வெறுப்பாக எழுந்து செல்லுகிறான்.)

---

## காட்சி 21.

(சிவகாமி வைரங்களையும், வைடூரியங்களையும் பார்த்து மகிழ்ந்தவண்ணமிருக்கிறாள். அப்போது அல்லி வருகிறாள்.)

**அல்லி:** சிவகாமி....! சிவகாமி....!!

**சிவ:** யார்....அல்லியா? இந்த வைரங்களைப் பார்த்தாயா? இந்த வைரங்கள் மிக உயர்ந்தவை கண்ணைப் பறிக்கிறதடி ஒளி...!

(இந்தச்சமயத்தில் உருக்குலைந்த தோற்றத்தோடு தமிழரசன் அங்கு வருகிறான். அவன் வந்ததைப் பெண்கள் இருவரும் கவனிக்கவில்லை)

**அல்லி:** அதுகிடக்கட்டும் சிவகாமி....உன் அத்தான் வெற்றிவாகை சூடிவந்திருக்கிறாராம், நகரெங்கும் இதுபற்றித்தான் பேச்சு.

**சிவ:** (எங்கோ நினைவாக) யார்வந்தால் நமக்கென்ன இன்னும் வைரங்களை கணக்கிட்டு முடியவில்லை.

**அல்லி:** இன்று அவர் உன்னைப் பார்க்க வந்தாலும் வருவார்.

**சிவ:** நீ வந்தால் ஏதாவது உளறிக்கொண்டேயிருப்பாய். எவ்வளவு கணக்கிட்டிருந்தேன் என்பதையே மறந்துவிட்டேன். இந்த வைரத்தைப் பாரடி எவ்வளவு பெரியதாகியிருக்கிறது.

**தமிழ:** (தனக்குத்தானே) காதகி.......யார்வந்தால் நமக்கென்ன...! (பல்லைக் கடித்த வண்ணம் கூறியவாறே தமிழரசன் அவமானம் தாங்காது உள்ளம் உடைந்து ஓடுகிறான். இதைப்பற்றியும் பெண்கள் இருவரும் அறியவில்லை.)

**சிவ:** அல்லி ஏன் நிற்கிறாய்? உட்காரு.

**அல்லி** நான் உட்கார விரும்பவில்லை.

**சிவ:** ஏண்டியம்மா கோபம்?

**அல்லி:** "யார் வந்தால் நமக்கென்ன என்கிறாயே"... இந்தக் கொடுஞ்சொல்லை உன் அத்தான் நேரிலே கேட்டிருந்தால் எவ்வளவு துன்பப்படுவார்? நீ இப்படி மாறிவிடுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லை.

**சிவ:** நீ அத்தான் வந்துவிட்டார் என்று சொன்னாய்? நான் கவனிக்கவில்லை ஏதோ நினைவு.

**அல்லி:** இதைப்போல இன்னும் பல பங்கு பொருளைச் சேர்ப்பது எப்படி என்ற நினைவுதானே?

**சிவ:** (கோபத்தோடு) அல்லி......நீ என் நெருங்கிய தோழிதான், என்றாலும் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று எண்ணிக்கொண்டுவிடாதே.

**அல்லி:** ஏண்டி கோபம் வருகிறது? நீதான் பொருள் தேடுவதற்குத் தொடக்கவிழாகூட நடத்திவிட்டாயே

**சிவ:** நீ என்னடி சொல்லுகிறாய்...?

**அல்லி:** உன் மனம்மகிழும்படி எவன் பொருள் கொண்டு வருகிறானோ அவனுக்கே மாலையிடுவேனென்று முரசறையச்சொன்னாயே அதைச் சொல்லுகிறேன்.

**சிவ:** அது என் சொந்தவிருப்பம்...அதில் தலையிட நீயார்?

**அல்லி:** அதை உன் அத்தான் கேட்டிருந்தால் அந்த உத்தமர் மனம் என்னபாடு பட்டிருக்கும்? அதைப் பற்றி சிறிதாவது சிந்தித்தாயா?

**சிவ:** அதைப் பற்றி நீ யேண்டி கவலைப்படுகிறாய்? அத்தான் கேட்டிருந்தால் அதற்குச் சமாதானம் கூற எனக்குத்தெரியும்.

**அல்லி:** நான் சாதாரண வணிகர் மகள், நீ கோடீஸ்வரி. நான் உன்னைப்பற்றி கவலைப்படும் நிலையிலா இருக்கிறேன்.

**சிவ:** நான் உன் கேலியையும் கிண்டலையும் கேட்டுக் கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது. நீ என்முன் நில்லாதே போ.

**அல்லி:** இனியுமா நான் உன்முன் நிற்பேனென்று நினைத்தாய்? கொஞ்சமும் இரக்கமற்ற வஞ்சகி.

[அல்லி வெறுப்புற்ற உள்ளத்தோடு வெளியேறுகின்றாள். சிவகாமி செல்வக் குவியல்களைக் காணும் விருப்பத்தோடு உள்ளே செல்லுகின்றாள்.]

## காட்சி 22.

[ தமிழரசன் தன் நிலை தளர்ந்து வருகின்றான். எதிர்பாராத நிகழ்ச்சி ஏதோ நடந்திருப்பதை எழிலன் உணருகிறான். ]

**எழில் :** என்ன தமிழரசா...?

**தமிழ :** தாங்க முடியாத அவமானம் நண்பனே! தாங்க முடியாத அவமானம்! யார் வந்தால் நமக்கென்ன என்று அந்தக் காதகி கூறியதை என் காது களாலேயே கேட்டேன்.

**எழில் :** நண்பா! இனி வருந்திப் பயன் என்ன? சிவகாமி இல்லையென்றால் உன் சிந்தையைக் கவர மற்றொரு சிங்காரி இல்லாமலா போய்விடப் போகிறாள்...?

**தமிழ :** நான் மிருகமல்ல...மனிதன்; ஆறறிவு படைத்த மனிதன்.

**எழில் :** வாணிபத்தில் பெரும் பொருள் இழந்த பொழு தெல்லாம் மனம் வருந்தாத நீ ஒரு பெண்ணிற்காக ஏன் இப்படிக் கலங்குகின்றாய்?

**தமிழ :** காசு தேடுவதில் ஏற்படும் தோல்வி போலத் தான் காதல் தோல்வியும் என்கிறாயா?

**எழில் :** அதற்காக அழுவதா? மலை குலைந்தாலும் மனங் குலையாத நீ அழுவதா?

**தமிழ :** நான் அழவில்லையடா நண்பனே! என் இதயத் தில் ஏற்பட்டுவிட்ட புண்ணிலிருந்து கசியும் செந்நீர் தான் கண்ணீராக வருகிறது...! எழிலா...! அவளை என் இன்பத்திருவீடு, இதயத்து ஒளி விளக்கு என்று எண்ணியிருந்தேன். இடிந்துவிட்டதடா என் இன்பத் திருவீடு! அணைந்துவிட்டதடா என் இதயத்து ஒளி விளக்கு! பெண்ணாக இருந்தவள் பேயாக மாறிவிட் டாள்! சோலையாக இருந்த உலகம் எனக்குப் பாலை யாக மாறிவிட்டது......!

(தமிழரசன் வேகமாக எழுந்து வெளியேறுகிறுன்)

எழில் : தமிழரசா! நில். எங்கே போகிருய்?

தமிழ : என்னைத் தடுக்காதே, நான் என் உலகத்திற்குப் போகிறேன்... என்னைத் தடுக்க நீ யார்?

[வெறிபிடித்தவன் போலத்தமிழரசன் ஓடுகிருன். எழிலன் சிறிது தூரம் அவன் பின்னேயே ஓடு கிருன். அதற்குப் பின் தமிழரசன் எங்கு சென்ருனென்று அறிந்துகொள்ள முடியாமல் வாடிய வண்ணம் எழிலன இல்லத்தை நாடுகிருன்.]

---

## காட்சி 23.

[பால்போல் நிலவு. மக்கள் மகிழ்ந்து வாழ வழிகாட்டும் அறநெறிக்கழகத் தலைவர் திருமறையரசர் கடற்கரையிலே உலவிய வண்ணம் இருக்கின்ருர். வெறி பிடித்தவன் போல் தமிழரசன் கடலை நாடி ஓடி வருகின்ருன். அதைக் கண்ட திருமறையரசர் அவன் பின்னேயே செல்லுகின்ருர்.]

தமிழ : காதகியின் காதல் அரும்புதற்குக் காரணமாயிருந்த கடலே! உன்னிடமே சாக வந்திருக்கிறேன். வா வா என்று அலைக்கரங்களால் அழைக்கும் கடலே! இதோ வந்துவிட்டேன். என்னை ஏற்றுக்கொள்.

திருமறை : நில், கடல் அலைக் கரங்களால் உன்னை வாவென்று அழைக்கவில்லை. போ இங்கே வராதே, போ என்றுதான் கூறுகிறது.

(வேகமாகச் சென்று அவன் கையை அழுத்தமாகப் பிடித்துக்கொள்கிருர்)

திரு : தம்பி... ஏன் இந்த இளமைக் காலத்தில் இப்படிப்பட்ட விபரீதமான எண்ணம்?

தமிழ: ஐயா! என்னைத் தடுக்காதீர்கள். அன்பற்ற இந்த உலகத்திலே வாழாதே என்று கடல் தன் அலைக்கரங்களால் கூவி அழைப்பதைப் பாருங்கள்! என்னை விட்டுவிடுங்கள்.

திரு: அலைக்கரங்களால் போவென்றுதானே கூறுகின்றது.

தமிழ: இல்லை... இல்லவே இல்லை... வா என்றுதான் அழைக்கின்றது.

திரு: மைந்தனே! அமைதியைக் கைக்கொள். ஏன இப்படித் துடிக்கிறாய்? ஓயாது அலை வீசுவது கடலின் தன்மை இல்லையா? வா என்று அழைப்பதும் போ என்று புகல்வதும் கடலின் செயலல்ல. அது நம் மனத்தில் தோன்றும்எண்ணத்தைப்பொறுத்தல்லவா இருக்கிறது. சிலருக்கு இந்த வையம் கசக்கிறது. சிலருக்கு இனிக்கிறது. கசப்பதும் இனிப்பதும் நம மனத்தில்தான் இருக்கிறது மைந்தனே! பலர் இன்பத்தில் துன்பத்தைக் காணுகின்றார்கள். ஆனால் சிலர் துன்பத்தில் இன்பத்தைக் காணுகின்றார்கள். அதுதான் அறிவின் பயன். ஏன் மகனே சாகத் துணிந்தாய்?

தமிழ: என்னை ஒன்றும் கேட்காதீர்கள். விட்டுவிடுங்கள்......

திரு: அது எப்படி முடியும்? எனக்கு மைந்தர்களில்லை. உன்னையே மைந்தனென்று எண்ணுகின்றேன். நீ விரும்பாவிட்டாலும நான் உன் தந்தையெனக் கருதுகின்றேன். நான் எப்படிக் கேட்காமல் இருக்கமுடியும்?

(திருமறையரசரின் அமைதியான பேச்சுத் தமிழரசனின் வெறியைத் தணிக்கும் மருந்தாக ஆயிற்று.)

தமிழ: (தலையிலே அடித்துக்கொண்டு) ஐயோ! அப்பா! அம்மா! ஒரு ஊதாரிக்காக உங்களைப் பிரிந்து என்ன காரியம் செய்ய இருந்தேன்?

திரு: ஏன் மகனே இச் செயலுக்குத் துணிந்தாய்?

தமிழ: ஐயா! காதலித்த கன்னி கைவிட்டாள் இந்த பூதலத்தில் இனி ஏன் வாழவேண்டும்? என்று எண்ணி மாளவந்தேன்.

திரு: பெற்ற தாயை, பெருமையோடு வளர்த்த தந்தையை, அருமைக்குரிய நண்பர்களை எல்லாம் மறந்தா மாளத்துணிந்தாய்? ஒரு பெண்ணுக்காகவா இந்த மண்ணை வெறுத்தாய்? அறியாமை மகனே அறியாமை.

தமிழ: அதற்காக மற்றொரு பெண்ணை மணப்பதா?

திரு: யார் சொன்னார்கள்? மற்றொரு பெண்ணை மணப்பது தவறுதான்! ஆனால் ஒரு மங்கை, கைவிட்டாள் என்பதற்காக மாள்வது அதைவிடத் தவறல்லவா? மைந்தா! உலகை ஒருமுறை பார்! நன்றாகப் பார்! விண்ணைத் தொடும் மாளிகைகள் மட்டுமல்ல, மண்ணைத் தொடும் குடிசைகளும் இருக்கின்றன. இந்த உலகிலே இன்பம மட்டுமல்ல. துன்பமும் உண்டு. துன்பப்படுவோரெல்லாம் துயர்துடைக்கக் கடலை நாடினால் உலகம் நாற்றமெடுத்துவிடும் மைந்தா! மனிதன் பிறக்கிறான் இறக்கிறான். இந்த இடைக் காலத்திலே அவன் தானும் வாழவேண்டும். பிறரையும் வாழவைக்கவேண்டும்.

தமிழ: ஐயா நீங்கள் யார்? உங்கள் பேச்சு என்னைக் காந்தமெனக் கவருகிறதே. நான் கடைத்தேற வழிகாட்டுவீர்களா?

திரு: தாராளமாக வாமகனே. அதோ தெரிகிறதே குடிசை. அதுதான் என் இருக்கை வா, அங்குபோய் அமைதியாய்ப் பேசுவோம்.

[ இருவரும் குடிசையை நாடிச் செல்கிறார்கள் ]

---

## காட்சி 24.

[ திருமறையரசரும் தமிழரசனும் குடிசையிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள் ]

தமிழ : குருதேவே முதலிலே தாங்கள் யாரென்று கூற வேண்டும்.

திரு : மகனே என் பெயர் திருமறையரசன் மக்களெல்லாம் தமிழ்மறை வழி வாழவேண்டும். அன்புவழி வாழவேண்டும் என்பதே என் எண்ணம். அதற்காக நான் பாடுபட்டு வருகின்றேன். ஒரு பெண்ணுக்காக இந்த மண்ணை வெறுத்துவிடுவது அறியாமை என்று கூறினேனல்லவா?

தமிழ : ஆம் ஐயனே

திரு : அதோ பார் மகனே! கந்தல் உடையணிந்து கஞ்சிக்கு வழியின்றி நொந்து வாடுகிறார்களே அவர்கள் தானப்பா நடமாடும் தெய்வங்கள். அவர்கள் வாழ்ந்தால்தான் நாமும் வாழ்வோம் இல்லையேல் வீழ்வோம்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

என்று தமிழ்மறை கூறுகின்றது மகனே மனக்கவலையை அகற்று போ அன்பு வழியைப் பரப்பு துன்பப்படும் மக்கள் இன்பமடையுமாறு தொண்டு செய். நீ பழியின்றி வாழ்ந்து ஏனையோரைப் பண்புடையோர்களாக மாற்று.

[ திருமறையரசர் தமிழரசனிடம் ஓலைச்சுவடி ஒன்றைக் கொடுத்து ] இதை வைத்துக்கொள், இதுவே என் அன்புப் பரிசு.

தமிழ : இது என்ன ஐயனே...? (அதைப்பார்த்து) ஓ! திருக்குறளா!

திரு : ஆம் திருக்குறள்தான் மகனே! வள்ளுவன் குறளைப் படித்துப்பார். இந்தவையம் கசக்காது இனிக்கும்!

## காட்சி 25.

[சில நாட்களுக்குப்பின் தமிழரசன் திருமறையரசரைக் காணுகின்றான்].

தமிழ: ஐயனே...!

திரு: மைந்த...வா...!

தமிழ: திருக்குறளை முழுதும் கற்றுவிட்டேன்.

திரு: மகிழ்ச்சி...!

தமிழ: இன்று முதல் என் பெயரைப் பொய்யா மொழியென மாற்றிக்கொண்டிருக்கிறேன்.

திரு: பொய்யாமொழி! பொருத்தமான பெயர்தான்.

தமிழ: ஐயனே...சில ஐயங்கள்...?

திரு: கேள் மகனே...? ஐயங்கள் தாம் அறிவை வளர்க்கும் தெளிவைக்கொடுக்கும் கேள்...?

தமிழ: இல்லறமே நல்லறமென்று சொல்லறம் நிரம்பிய வள்ளுவன் கூறியிருக்கச் சிலர் வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்! என்று கூறிக்கொண்டு இளமையிலேயே துறவறம் மேற்கொள்கிறார்களே ஏன்?

திரு: அது துறவறமல்ல மகனே சுயநலம்! முதுமைப் பருவத்தில் துறவேற்பதே முத்தமிழ் நாட்டினர் பண்பு.

தமிழ: துறவறமென்றால் என்ன ஐயனே?

திரு: மண்ணை, பெண்ணை, பொன்னை மறவென்றுகூறி மடமை வழிகாட்டுவதல்ல, அவற்றைக் கொண்டு மகிழ்ந்து வாழவழிகாட்டுவது, சுருங்கச் சொன்னால் தனக்கென வாழாப்பிறர்க்குரியாளனாதல்.

தமிழ: காவி உடைதரிப்பதின் கருத்து என்ன?

திரு: அது தூய்மையின் சின்னம். வாய்மையுடையவன் என்பதை இந்த வையத்திற்குக் காட்டும் அறிகுறி. ஆனால் பலர் காவியுடையோடு பாவிகளாய் வாழலாம் அது காவியுடையின் குற்றமன்று அந்தக் கண்மூடிகளின் குற்றம்.

தமிழ: ஐயனே தெளிவு பெற்றேன். இன்றே புறப்படுகின்றேன்.

திரு: எங்கு அப்பா...?

தமிழ: புகார் நகர மக்கள் மனத்தைப் புனிதப் படுத்துவதற்குத்தான். நீங்கள் இருக்கிறீர்களே? மேலும் சிறிதுகாலமாவது இந்நகரைவிட்டு வேறு நகரங்களில் வாழ விரும்புகின்றேன் ?

திரு: உண்மைதான்! அப்பொழுதுதானே உள்ளம் முழு அமைதிபெறும்.

தமிழ: ஐயனே! தங்களைக் கண்டபின்தான் கரும்பின் சாறு, காதலின கனி, கற்கண்டு, "தொண்டு" என்பதை அறிந்தேன்.

திரு: சரி மகனே போய்வா. உன் எளிமையான பேச்சு, இனிமையான பாடல் எவர் மனத்தையும் கவராமல் இருக்காது.

(தமிழரசன் திருமறையரசரை வணங்கிச் செல்லுகின்றான்)

---

## காட்சி 26.

[பெருநகரங்கள், சிறிய ஊர்கள் எங்கும் பொய்யாமொழிக்கு நல்ல வரவேற்பு. இந்த வையகம் வாழ வள்ளுவன் குறளே வழிகாட்டும் என்று பொய்யாமொழி பாடினான். பேசினான். அதைக் கேட்க மக்கள் ஆயிரம் ஆயிரமாகக் கூடினார்கள். இப்பொழுது ஒரு கூட்டத்தில் பொய்யாமொழி பேசுகின்றான்.]

**பொய் :** பெருமைக்குரிய அருமை மக்களே! பூசலும் ஏசலுமின்றி நாம் வாழவேண்டும். இல்லறம் நல்லறமாக இருக்கவேண்டும். பழுதற்ற நட்புப் பாரில் பெருகவேண்டும். பொய்மை ஒழிந்து மெய்மை வளரவேண்டும். இத்தனையும நடக்கவேண்டுமானல் நாம் அன்புவழி நடக்கவேண்டும். அன்பால் அகிலத்தில் அனைத்தையும் அடையலாம்.

பெரியோர்களே! பெண்ணை, மண்ணை, பொன்னை மற என்று கூறுவது பேதமை. பெற்று வளர்த்த தாய், உற்ற துயரம் தீர்த்து உவகையூட்டும் மனைவி இவர்கள் பெண்களல்லவா? மண்மீதிற்பிறந்து மாளும் வரை பொன்துணையின்றி வேறு என்துணை செய்யும் மண்ணை மற என்று கூறி மண்மீதுதானே வாழ்கின்றோம்?

அன்புடைய பெருமக்களே!.........வாழ்வு சிறக்க வேண்டுமானல், வறுமை தொலையவேண்டுமானல், வள்ளுவன வாய்மொழியை மறவாது பயிலுங்கள். அன்பு சுரக்கும்; பகையும், பூசலும், வஞ்சம் உள்ளத்திலிருந்தி புறக்கும், பினபு எனன...! அன்பு நிறையப் பகுத்துண்டு வாழும் பண்புபெருகும். இல்லறமே நல்லறம் என்ற எழில்மிக்க எண்ணம் தோன்றும் வாழ்வு மலரும், இந்த வையம் சோலையாகும்.

(மகிழ்ச்சியோடு மக்கள் கலைந்து செல்லுகின்றார்கள். கூட்டம் கலைந்ததும் தான் வாழும் காட்டை நோக்கிச் செல்லுகின்றான் பொய்யாமொழி.)

## காட்சி 27.

[பொன்னும் பொருளுமே பெரிதென எண்ணித் தன்னை மறந்த சிவகாமி, மீண்டும் புகார் நகரை அடைந்த பொய்யாமொழியின் பேச்சைக் கேட்டுப் புத்துணர்வு பெறுகின்றாள். தன் தவற்றை உணர்ந்ததும் உத்தமியாகிய அல்லியின் இல்லம் நாடிஓடி வருகின்றாள்.]

**சிவ :** (சோகத்தோடு) அல்லி......!

**அல்லி :** (திகைத்து) யாரது? சிவகாமியா?

**சிவ :** ஆம் அல்லி... சிவகாமிதான் வந்திருக்கிறேன்!

**அல்லி :** யார்? இமயம் முதல் குமரி வரை எவரிடமும் இல்லாத செல்வத்தைத் தன் ஏகபோகமாகக் கொண்ட சிவகாமியா வந்திருப்பது! ஏழை வணிகர் மகள் அல்லி இல்லத்திற்கா? நான் கனவு காணவில்லையே! (தன்னைத்தானே கிள்ளிப் பார்த்துக்கொண்டு) வலிக்கிறது. கனவில்லை. செல்வச் சிங்காரி அவர்களே உங்கள் திருமணத் தேர்தல் முடிந்துவிட்டதா?

**சிவ :** போதும் அல்லி, போதும்! செல்வத்தின் சிறப்பைப் பற்றிச் சிந்து பாடிய சிவகாமியல்ல; செல்வச் செருக்கால் சீரழிந்த சிவகாமி வந்திருக்கிறேன். உண்மையை உணர்ந்ததும் உற்ற தோழியாகிய உன்னைக் காண ஓடோடி வந்தேன் அல்லி; ஆற்றில் விழுந்து கரையேற முடியாத மானைப்போல் தவிக்கின்றேன். நீ வேறு என் மார்பிலே அம்பைப் பாய்ச்சாதே! வெந்த புண்ணிலே வேலை வீசாதே.

**அல்லி :** என் பேச்சு உனக்கு வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவதுபோல் இருந்தால் உன் பேச்சு, உன் தவருன போக்கு உன் அத்தானுக்கு எத்தகைய பெரு வேதனையை ஏற்படுத்தியிருக்கும்? சிந்தித்துப பார்! இன்று கண்ணீரைச் சிந்துவதால் பயனில்லை. யார் வருந்திஞல் உனக்கென்ன? மலை மலையாய்ப் பொருள்கள் உன் மாளிகையில் குவிந்து கிடக்கும் போது மற்றவர்களின் கண்ணீர், மன வேதனை உன்னை என்ன செய்துவிடும்?

**சிவ :** அல்லி... நான் மமதைகொண்டவளாக வரவில்லை. மாசற்றவளாக வந்திருக்கிறேன். அன்பே உருவான அத்தானை, அருமைத் தோழியாகிய உன்னை, கொஞ்சமும் இரக்கமின்றி விரட்டியடித்தேனே அந்த அகங்காரியாக வரவில்லை! அன்பின் உயர்வை உணர்ந்த பண்பான பெண்ணுக வந்திருக்கிறேன். உணர்ந்துவிட்டேன் அல்லி... என் குற்றங்

களையெல்லாம் உணர்ந்துவிட்டேன்! என் கொடுமைகளை யெல்லாம் அறிந்துகொண்டுவிட்டேன். என் தவருன போக்கால், தகாத செயலால் அன்பே உருவான அத்தான் மனம் என்ன பாடுபட்டதோ? அதை எண்ணும்போது என் இதயமே வெடித்துவிடும்போல் இருக்கிறது. (கண்ணீர் கசிய விம்முகிருள்.)

**அல்லி :** (கண்ணீர் சோர, மனமுருகி அவளை அணைத்த வாறே) சிவகாமி!

**சிவ :** (விம்மலுக்கிடையே) அல்லி என்னை மன்னிப்பாயா?

**அல்லி :** அசடே! அழாதே நீ மன்னிப்புக் கேட்க வேண்டியது என்னிடமில்லை உன் அத்தானிடம் கேட்க வேண்டும (சிறிது பொறுத்து) சிவகாமி! உன் மன மாற்றத்திற்குக் காரணம் என்ன?

**சிவ:** அல்லி செல்வர்கள் பலர் வந்தனர் மணம்பேச. பொன்னும் பொருளும் மிக உண்டு என்று பூரிப்போடு கூறினர்கள். ஆனல் அவர்கள் கருத்தெல்லாம் என்னிடம் மலைமலையாய்க் குவிந்து கிடக்கும் பொருட் குவியல்களை எப்படிக் கவரலாம் என்பதிலேயே தான் இருந்தது. முத்துக்களைப் புகழ்ந்தார்கள் ஆனல் என் மோகனச் சிரிப்பு,முத்துப் பற்கள் அவர்கள கண்களிலே படவில்லை. தங்கத்தின் ஒளியைப் புகழ்ந்தார்கள். ஆனல் பங்கமற்ற என் அழகு அவர்கள் கண்களிலே படவில்லை. நான் பொருளைப் புகழ்ந்தேன், போற்றினேன் ஆனல் அந்தப் பொருளையுடைய என்னைப் போற்ருமல் அவர்கள் பொருளையே போற்றியபோது எனக்கே பொறுக்கவில்லை.

உன்னை என் அன்பிலே அமர்த்துவேன், பண்போடு காப்பேன் என்று அன்போடு கூறியவர் அத்தான் ஒருவர் தான் அல்லி! இத்தகைய குழப்பங்களில் சிக்கித் தவிக்கும் பொழுதுதான் பொய்யாமொழியின் பேச்சைக் கேட்டேன் அவருடைய ஆணித்தரமான பேச்சு என் அகத்திலே நிறைந்திருந்த மாசைப் போக்கியது.

" அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம்
பொருட்செல்வம் பூரியார் கண்ணு முள "

என்ற வள்ளுவன் குறளைக்கூறி அருளின் பெருமையை, அன்பின் பெருமையை அவர்கூறிய சிறப்பை நான் கூறி நீ அறிந்துகொள்ளமுடியாது அல்லி. அவர் பேச்சை நினைக்கும்பொழுதெல்லாம் அத்தானின் நினைவு தான் வருகிறது அல்லி (கண்ணீர் சிந்துகிருள்) நான் இனி எங்கு சென்று என் அத்தானைக் காண்பேன் ?

**அல்லி :** சிவகாமி ! மனித இனமே நம்பிக்கையால்தான் உயிர் வாழ்கின்றது. மனம் உடைந்துவிடாதே ? உன் மனம் மகிழும்படியாக ஓர் நாள் அவர் வந்தேதீருவார்.

## காட்சி 28.

(பொய்யாமொழி காட்டு வழியாகச் செல்லுகின்ருன். ஓர் இளைஞன் அவனைப் பின் தொடருகிருன்.)

**இளைஞன் :** சுவாமி...!

**பொய்யா :** (மௌனமாக நடக்கிருன்)

**இளை :** (மீண்டும்) சுவாமி...!

**பொய் :** யாரது...?

**இளை :** (விம்மலுடன்) சுவாமி ...!

**பொய் :** ஏன் தம்பி கண் கலங்குகின்ருய் ?

**இளை :** நான் இன்று முதல் தங்களடிமை.

**பொய் :** (புன்னகை) அடிமையா ! யாருக்கு யார் அடிமை ! அடிமை எண்ணங்களை அழிக்க அல்லவா நான் பாடுபடுகின்றேன். உனக்கு என்ன வேண்டும் ?

**இளை :** நான் உங்களுடனே வருகின்றேன். நீங்கள் தடை செய்யாதிருக்க வேண்டும்.

**பொய் :** தம்பி... எங்கும் இருள் நிறைந்துவிட்டது. கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியிலே காரிருள் சூழும் நேரத்திலே எப்படித் தம்பி நீ வரமுடியும் ? நகரத்தை நாடிச்செல். மீண்டும் நாம் நாளை பார்ப்போம்.

இளை : இல்லை சுவாமி ...... நான் வருகிறேன்.

பொய் : உன் விருப்பம் அதுவானால் எனக்கென்ன தம்பி தடை. நட, போகலாம். (சிறிது பொருத்து) என்ன தம்பி, அஞ்சுகிறாயா? அக இருளை அகற்றிய நீ, புற இருளுக்கா பயப்படுகிறாய்? இன்னும் சிறிது தூரம் தான், நட.

---

## காட்சி 29.

[பொய்யாமொழி தான் தங்கியிருக்கும் ஆல மரத்தை அடைகிறான். எங்கும் இருள் கவிந்து நிற்கிறது.]

பொய் : தம்பி...! மெதுவாக இந்தக் கல் மேடையிலே உட்காரு. ஏன் தேம்புகின்றாய் பெண்ணைப் போல. இந்த நாளில் பெண்கள் சிலர் தங்கள் பெண்மையை மறந்து பெரும் பாதகம் செய்யும் அளவுக்குத் துணிந்துவிடுகிறார்கள். அதை நீ எங்கே அறியப் போகிறாய் ...?

(இளைஞன் தேம்பிக்கொண்டேயிருக்கிறான்) உன் அழுகைக்கு அச்சமும் காரணமாக இருக்கலாம்! இதோ இந்த மட்டைகளைக் கொளுத்துகின்றேன். அதிலிருந்து ஏற்படும ஒளியால் உன் அச்சம் நீங்கும். (பொய்யாமொழி மட்டைகளைக் கொளுத்துகின்றான். அது லேசாக எரிய ஆரம்பிக்கின்றது. மீண்டும் பொய்யாமொழி பேசுகின்றான்.) இதோ பார்......! பரந்து விரிந்த இந்த ஆலமரந்தான் நான் வாழும் பர்ணசாலை. இந்த பர்ணசாலைக்குச் சுவரில்லை, கத வில்லை, பூட்டில்லை. பழங்களே உணவு. பக்கத்தே காவிரி! எனவே பருகும் நீருக்குப் பஞ்சமில்லை. இங்கு யாருக்கும் அஞ்சி வாழ வேண்டிய அவசியமில்லை. தஞ்சமென்று நம்மை வந்து அடைவோருமில்லை. நாம் யாரையும் தஞ்சமடையவேண்டிய அவசியமுமில்லை (நெருப்பு நன்றாக எரிய ஆரம்பிக்கிறது) தம்பி

கண்டாரைக் கவரும் வனப்பு! கட்டுக் குலையாத இளமை! இந்த நிலையில் ஏன் உனக்கு இத்தகைய துயரம்? காதலித்த கன்னியின் கருத்து மாறிவிட்டதா? அல்லது அவளிடம் களங்கம் கண்டாயா? பொருள் தேடும் துறையில் இருள் சூழ்ந்துவிட்டதா? (பொய்யாமொழி இளைஞன்பக்கலிலேசெல்லுகின்றான். இளைஞன் துடித்து ஒதுங்குகின்றான்) ஏன துன்பம்? சொல்லமாட்டாயா? என்னை உன் சகோதரன்போல் எண்ணிக்கொள். மனதைத் திறந்து பேசு தம்பி (பொய்யா பொழி இளைஞனைத் தொடப் போகிறான்) அவன் துடித்தவாறே......

இளை : சுவாமி!

பொய் : தம்பி மிகுதியான துன்பத்தால் உன் உள்ளம் குமுறுகின்றது. பிறகு பேசுவோம். உன் உடைகளைக் களைந்துகொள். தலைப்பாகையை எடுத்துவை. வா காவிரியை நாடிச்சென்று வருவோம்.

இளை : சுவாமி......

பொய் : ஏன் தயக்கம்? (வேகமாகச் சென்று தலைப்பாகையை எடுக்கப்போகிறான்.

இளை : நானே எடுத்துவிடுகிறேன் (இளைஞன் தலைப்பாகையை எடுக்கிறான்)

பொய் : ஆ! பெண்ணா! சீ நீ யார்? ஏன் இங்கு வந்தாய்? சொல ஏன் வந்தாய்?

பெண் : சுவாமி...!

பொய் : (கேலிச் சிரிப்போடு) சுவாமி யென்னவேண்டியிருக்கிறது சுவாமி! மோசக்காரி உண்மையைச் சொல். ஏன் இங்கு வந்தாய்? இப்படித்தான் ஒருத்தி அத்தான் அத்தான் என்று ஆசை காட்டி என்னைப் பித்தனாக்கிப பின் செத்தால் என்ன, வாழ்ந்தால் என்ன என்று எண்ணும் பேயாக மாறிவிட்டாள். அந்த அநியாயக்காரியைப் பொதிகை மலைத் தென்றல், பொலிவுடைய மணமலர், வாழ்வை வளமாக்கவந்த பெண்ணரசி என்றெல்லாம் பிதற்றி

னேன். அவள் பொதிகைமலைத் தென்றலல்ல புயல் கொடுமையான புயல். பொலிவுடைய மணமலரல்ல, முள். கூர்மையான முள். வாழ்வை வளமாக்கவந்த பெண்ணரசியல்ல, பேய்! வாழ்வைப் பாழாக்க வந்த பேய். அவளைப்பற்றி இனி என்ன? செத்தவளைப்பற்றி எதற்காகச் சிந்தனை. என்னைப் பொருத்தவரையில் அந்த மாயக்காரி மாண்டுபோய்விட்டாள.

[ வந்த பெண் குமுறிக் குமுறி அழுகிறாள் ]

ஏன் அழுகிறாய் நீயும் அவளைப்போல அநியாயக் காரிதானோ? இருக்கும். அதனால்தானே நான் கூறியதைக கேட்டுக் குமுறிக் குமுறி அழுகிறாய். குற்ற முள்ள மனம் குத்தத்தானே செய்யும். உன்னை நம்பிய அந்த நல்லவன் பரிதாபத்திற்குரியவன் எங்கே அலைகிறானோ? எப்படிப் பரிதவிக்கிறானோ? பாவி என்முன் நில்லாதே ஓடு! நிற்காதே தீமை உடைய வளே ஓடு!

**பெண்:** ஐயா! நான் தீமை உடையவள் இல்லை. நான் வாய்மையுடையவளதான் தயவுசெய்து என் கதையைக் கேளுங்கள். என் மாமன் மகன் பெயர் தமிழரசன் ( இதைக்கேட்டதும் பெண்ணின் முகத்தைக் கூர்ந்து பார்க்கிறான். திகைக்கிறான், அதுமட்டுமா; வியப்பைக் கூட அடைகிறான் ) சிறுவனாய் வெளிநாடு சென்ற அவர் இளைஞனாய்த் திரும்பி வந்தார். நாங்கள் அன்பால் ஒன்றானோம். பின் செல்வச் செருக்கால் என் சிந்தை மாறியது. என் ஆணவத்தால் அவரை அலட்சியம் செய்தேன். பெண்ணாக இருந்த நான் பேயாக மாறிவிட்டேன். என் பொன்னாக இருந்த அவர் எங்கோ புறப்பட்டுப் போய்விட்டார். பின் என்னை மணம்பேசவந்தவர்கள் எல்லாம் பொன்னையும் மணியையும் கொண்டுவந்து குவித்தார்கள். உன்னை, வைத்தால் மாளிகை அமைத்து வாழவைப்போம், பொன்பல்லக்கில் ஊர்வலமாய் அழைத்துச் செல்வோம், கண்ணைப் பறிக்கும் மஞ்சத்திலே உன்னைக் கொஞ்சிவிளையாட வைப்போம், கவரிவீச காவல் செய்ய பல கன்னியரையும் அமர்த்துவோம் என வந்

துவர்களெல்லாம் எனக்குத்தரும் வரிசைகளைப்பற்றிக் கூறினார்கள். ஆனால் வந்தவர்களில் ஒருவனாவது உன்னை வாழ்விலும் தாழ்விலும் வைத்துப் போற்றுவேன, என் அன்பிலே உன்னை அமர்த்துவேன், உன் துன்பத்தை என் துன்பமாகக் கருதுவேன் என்று சொல்லவில்லை என் தவற்றை உணர்ந்தேன், வாழ்விற்குப் பொன்னும் பொருளும் வேண்டும். அவற்றோடு அன்பு செலுத்தும் அருமைக் கணவனும் வேண்டும். அப்பொழுதுதான் பெண்ணின் வாழ்வு வற்றாத இன்ப நதியாக இருக்குமென்று உணர்ந்தேன்.

அன்பே! அன்பே! என்று ஆயிரம்முறை கூறும் அத்தானை என் அன்பைத் தேடினேன். எங்கெங்கோ தேடினேன். நாடு நகரங்களிலே, மக்கள்மன்றங்களிலே, கோவில் குளங்களிலே காடுகளிலே எங்கும் தேடி இளைத்தேன். இறுதியில் மறுபடியும் எதிர் பாராத விதமாக உங்களைக் கண்டேன். காவியும் கமண்டலமுமாகக் காட்சிதரும் தங்கள் குரல் என் அத்தானின் குரல்போலஇருந்தது, அதனால்தான் உங்கள்பின்னே ஓடிவந்தேன். ஐயா! வேறு தவறான எண்ணம் யாதொன்றும் என்னிடமில்லை.

ஐயா! அன்பற்ற வாழ்வு பண்பற்ற காடு. அன்பின் உருவம் அருளின் பிறப்பிடம் என் அத்தானின் மனம் நோகப் பேசினேன். மானமே பெரிதென எண்ணிய அவர்மனம் வெறுத்து ஓடினார்.

ஐயா! நீங்கள் இந்தப பேதைக்கோர் உதவி செய்யவேண்டும். என் அத்தான் தமிழரசரை எங்காவது எப்போதாவது கண்டால் கூறுங்கள்; சிவகாமி அவள்குற்றத்தை உணர்ந்துவிட்டாள். அவள் செய்த கொடுமைகளுக்காகக் கண்ணீர்விட்டுக் கலங்கினாள், உங்களிடம் மன்னிப்புக் கேட்கத் துடியாய்த் துடித்தாள் என்று கூறுங்கள்.

[பொய்யாமொழி கண்ணீர் சோரச் செயலற்று நிற்கிறான். அந்தச் சமயத்தில் சிவகாமி தனக்குத்தானே]

இனி நான் யாருக்காக வாழ வேண்டும்? கொளுந்துவிட்டெரியும் நெருப்பே, குவலயத்தின் இருள் நீக்கி எழில் காட்டும் ஒளியே என்னை ஏற்றுக்கொள்.

[நெருப்பிலே விழப்போகிறாள். பொய்யாமொழி துடித்து]

பொய் : சிவகாமி! சிவகாமி!!

சிவ : (திகைத்து நின்று) யார்?

பொய் : கண்ணே சிவகாமி! என்னைத் தெரியவில்லையா உனக்கு?

[பொய்யாமொழி தன் காவித் தலைப்பாகையையும், கமண்டலத்தையும் வீசியெறிகிறான். தமிழரசனாகக் காட்சி தருகிறான்]

சிவ : (வியப்போடு) ஆ! அத்தானா?

பொய் : நீ என் சிவகாமிதான்... நான் உன் அத்தான்தான. (கட்டியணைத்துக் கொள்கிறான்)

சிவ : அத்தான், என்னை மன்னித்துவிட்டீர்களா?

தமிழ : கடந்ததை மறந்துவிடு கண்ணே. பிரிந்த நாம் கூடிவிட்டோம்.

சிவ : இனிப் பேச்சென்ன ' அத்தான். ஊர் செல்வோம். பெற்றோரைக் காண்போம். பிறகு........

தமிழ : ஏன் வெட்கப்படுகிறாய்? சொல்லு.

சிவ : என் கழுத்திலே உங்கள் திருக்கரத்தால் தாலிக் கயிற்றைக் கட்டுங்கள்.

தமிழ : உன் கழுத்தில் கட்டுவது அன்புக்கயிறு கண்ணே! அன்புக் கயிறு!!

அன்பு வாழ்க! அறநெறி ஓங்குக!!